
ஓம் தத் சத்
பரப்பிரமனே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார்

அருளிச் செய்த

நாநா சீவ வாதக் கட்டளை



உரையாசிரியர் ஜவஹர் சுவாமிகள்

கணபதி பதிப்பகம்
1/349, திருப்பூர் குமரன் தெரு, பாடியநல்லூர், சென்னை-52.

ஓம் தத் சத்

பரப்பிரமனே நம :

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார்

அருளிச் செய்த

நாநா சீவ வாதக் கட்டளை

வேதாந்த விஞ்ஞான

ஸ்ரீமத் ஏழுமலையானந்த சற்குருவின்

பாத சேகரராகிய

ஜவஹர் சுவாமிகள்

அவர்களால் விளக்கவுரை எழுதப்பட்டு

பாடியநல்லூர்

விபு வித்யா பீடத்தாரால்

வெளியிடப்பட்டது.

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	நாநா சீவ வாதக் கட்டளை
ஆசிரியர்	:	ஜவஹர் சுவாமிகள்
மொழி	:	தமிழ்
வகை	:	எழுத்து தொகுப்பு
முதற் பதிப்பு	:	2009
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	52
தாள்	:	11.6
எழுத்து அளவு	:	13
உரிமை	:	ஆசிரியருக்கு
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
கணினி அச்சுக் கோர்ப்பு	:	ஸ்ரீ வாரி பிரிண்டர்ஸ் செங்குன்றம்.
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வாரி பிரிண்டர்ஸ் செங்குன்றம்.
வெளியீடு	:	கணபதி பதிப்பகம், எண். 1/349, திருப்பூர் குமரன் தெரு, பாடியநல்லூர், சென்னை-52.

பதிப்புரை

உலகத்தில் உயிர்கள் தோன்றியது முதல் துன்பமும் அவ்வுயிர்களை துரத்த ஆரம்பித்து விட்டது. அத்துன்பத்திலிருந்து விடுபடும் முயற்சியாக நமது பாரத திருநாட்டின் ரிஷிகளும், முனிகளும் தம் வாழ்நாளை முழுமையாக அற்பணித்து தங்களின் புலன் இன்பங்களைத் துறந்து உபநிஷத்துக்களின் வாயிலாகவும், வேதங்களின் வாயிலாகவும் அவர்கள் கண்ட உண்மைகளை பதிவு செய்து சென்றுள்ளார்கள். அத்தகைய அரிய பொக்கிஷங்களான நூல்களை எல்லாம் வேத மொழி என்றழைக்கப்படும் வடமொழியிலேயே உள்ளனவாக இருந்தன. அதைத் தமிழ்கூறும் நல்லுலகம் உய்யும் பொருட்டு சில மகான்கள் அவற்றை நன்கு கற்றுணர்ந்து பொருள் பிழறாமல் நமக்குத் தந்துள்ளனர். அந்த வகையிலேயே வேதாந்த உலகிற்கு தமிழில் உள்ள முதல் நூலாக **ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்** அருளிய **நாநா சீவ வாதக் கட்டளை** என்னும் நூல் இந்த வேதாந்தத்திற்கு வாய்ப்பாடு என்று சொன்னால் அது மிகையாகாது.

இது உலகின் தோற்றத்தையும் அதில் உள்ள சகல ஜீவர்களின் உற்பத்தியைப் பற்றியும் 36 தத்துவங்கள் வாயிலாக வெளிப்படுத்தி அதில் வரும் 35 தத்துவங்களும் தோற்ற மாத்திரமே என்றும் பிரமமாகிய அந்த பரம்பொருள் ஒன்று மட்டுமே உண்மையில் உள்ளது என்பதை எளிமையாக விளக்குகின்ற ஒரு நூலாகும்.

ஆனாலும் தற்காலத்தில் உள்ள நூதன விவேகிகட்கு இதில் உள்ள விளக்கங்களும், பரிபாஷைகளும் விளங்கிக் கொள்ள பக்குவம் இல்லாத காரணத்தினால் நம் பீடத்தில் உள்ள புதிய அன்பர்களுக்கும், உலகினோருக்கும் எளிதில் விளங்கும் பொருட்டும், இந்த நூலை அறிந்த சிலருக்கும் மேலும் அதில் உள்ள நுண்பொருள் விளங்கும் பொருட்டும், இக்கட்டளையை எளிமைப் படுத்த வேண்டுமாய் தவத்திரு. ஜவஹர் சுவாமிகளிடம் வேண்டினோம். அவர்களும் நம் மீது கருணை கொண்டு ஆத்மபுராணம், கைவல்யம், விசாரசாகரம், வேதாந்த சூடாமணி போன்ற வேதாந்த நூற்களின் மேற்கோள்களுடன் நமக்கு உரை செய்து தந்துள்ளார்கள்.

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே
சங்கு சுட்டாலும் வெண்மை தரும்

என்ற ஔவையின் பாடற்பொருளாக தவத்திரு. ஜவஹர் சுவாமிகள் செல்வம் நிறைந்திருந்த பொழுது பல குருமார்களின் குரு பூஜைக்கும், பல வேதாந்த மடங்களுக்கும், வறுமையுற்று தன்னிடம் வந்து ஏழைகளுக்கும், கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கும் தனது செல்வத்தை அர்ப்பணித்தார்கள். தற்பொழுது பொருள் குறைந்த பொழுதும் தன்னிடம் உள்ள வற்றாததும், அள்ள, அள்ள குறையாததுமாகிய அருளை நமக்கு அள்ளித் தந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அருட்சேவை தொடரவும். மேன்மேலும் அவர்களால் அருளப்பட உள்ள நூற்களை வெளியிட காத்திருக்கிறோம் என்றும், மேலும் எங்களின் இந்த பணித் தொடர குருமார்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும் எங்களை வாழ்த்தி அருள் புரியுங்கள் என்று வேண்டி வணங்கி விழைகிறோம்.

இங்ஙனம்,

விபு வித்யா பீடம், பாடியநல்லூர்.

பிரஹ்மமே சத்யம்

சுகப்ராப்தியும் அதற்கவசியமான துக்க நிவர்த்தியுமே எல்லா உயிரினங்களின் வாழ்க்கைக் குறிக்கோள்களாக அமைந்துள்ளன என்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் இந்த விடுதலும் அடைதலும் அநித்யமாக இருப்பதாக மற்ற உயிரினங்கள் அனுபவித்த, நிலைத்த சுகத்தை ஒருசில, பெறுதற்கரிய பிறவியாகிய மனிதப் பிறவியைப் பெற்ற, மகான்களால் மட்டுமே அடைய முடியும் என்பது வெள்ளிடை மலை.

அந்த மஹான்கள்,பேரின்பத்தை அடைந்த வழிதான் வேதாந்தம். அது நம்போன்றோரையும் பேரின்பத்திற்கு இட்டுச் செல்லும் ராஜ பாட்டை. இந்த ராஜ பாட்டை என்கிற விசாரனைக்கு தகுந்த நூல்களாக, கோவிலூர் வேதாந்த மடம் முன்னோடியாக இருந்து, வகுத்த முறையாக தேர்வு செய்து கொடுத்தவை பதினான்கு. அவற்றுள் முதல் நூல் நாநா சீவ வாதக் கட்டளை என்னும் நூல். பலவாகத் தோன்றும் இவ்வுலகைப் பற்றிய அறிவையும் அதே சமயத்தில் இந்தப் பலவாகத் தோன்றும் ஒரே பொருளையும், இவை எல்லாவற்றையும் பார்த்து உணர்பவனைப் பற்றியும் தெளிவான அறிவைக் கொடுப்பது தான் இந்நூலின் நோக்கம்.

இது சாமவேதத்தைச் சார்ந்த சாந்தோக்ய உபநிஷத்தின் சாரமான தத்வமஸி என்ற மஹா வாக்கியத்தின் விளக்கமாக அமைந்த நூல் மற்றும் தைத்ரீயோபநிஷத்தின் உபதேசங்களையும் உள்ளடக்கிய நூல்.

வீட்டு நெறியில் முயல்பவருக்கு நுழைவாயில் போன்ற இச்சிறுநூலை உபகரித்தவர் திருக்காளத்தி ஸ்ரீ சேஷாத்திரி சிவனார். வடமொழியில் இயற்றப்பட்ட இந்நூலை தமிழில் உரைநடை வடிவிலேயே உபகரித்தவர் அவருடைய மாணாக்கர் ஸ்ரீ நாராயண சிவனார்.

இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ் வேதாந்த நூல்கள் எல்லாம் வடமொழியிலேயே வந்துள்ளதால் பரிபாஷை என்று சொல்லப்படும் தத்துவ ஆராய்ச்சிக்கு அங்கமாக இருந்து வந்துள்ள கலைச்சொற்கள் பல. இவை இந்நூலில் பெருமளவு உள்ளதால் உரையில்லாமல் இந்நூலைப் படிக்கும் முமுட்சுகள் அடையும் இடர்பாடுகளும் பலப்பல.

முக்தி நெறியில் முயலும் மாணாக்கர்களின் இடர்களைக் களைவதே சீரிய சிவத்தொண்டு என்ற உணர்வில் சசிவன்னபோதம், சிவபுராணம், கைவல்யம், பஞ்சதசி போன்ற நூற்களுக்கு உரைவிளக்கம் எழுதி வருபவர் சிவனருட்செல்வர் தவத்திரு. ஜவஹர் சுவாமிகள். இவர் மாணாக்கர்கள் தம்மிடம் வந்தால் தான் உபதேசம் என்றில்லாமல், மாணாக்கர்களை தேடிச் சென்று உபதேசித்த தமிழ்நாட்டு தத்துவஞானி ஸ்ரீலஸ்ரீ குருகிணகர் சுவாமிகள் வழியில் சென்று மாணாக்கர்களை தன்னைப்போல் பேரின்பம் அனுபவிப்பவர்களாக மாற்ற வேண்டும் என்பதில் தீராத வேட்கை உள்ளவர்.

அவருடைய தூய தியாக உணர்வில் எழுந்த இந்த உரைநூல், பல வேதாந்த நூல்களில் இருந்து மேற்கோள்கள் அணி செய்ய, மாணாக்கர்களின் ஐயம் திரிபுகளை அகற்றி அகண்டாகார பேரின்ப அடைவிற்கு நுழைவாயில் போல் அமைந்துள்ளது.

நூலுள் நுழைக. எந்நாளும் இன்பமே.

- ஸ்ரீமத் பெருவெளியான்.

ஓம் சத் சத்

பரப்பிரமனே நம :

சகுண பிரம வணக்கம்

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையு ணாடு

பொருள் வணக்கம்

உலக முதற் பொருளை உம்பர்க்கு உணர்வரிதாம் பொருளை
ஓதிய வேதாகமத்தின் உச்சியின் உட்பொருளை
பலகலை பொருள் முடிவின் முடிவான பொருளை
பற்றற பற்றிய பெரியோர் பரவிய வான் பொருளை
அலை திவலை நுரை கடலில் உதித்து ஒடுங்குமா போல்
அகிலாண்டம் உதித்து ஒடுங்கும் அதன் மூலப் பொருளை
இலகிய சற்குருவாகி யானாகும் அப்பொருளை எங்குமாம்
பரம் பொருளை யாமும் வணங்குதுமே.

குரு பாதக்கமல வணக்கம்

சீர்மிகு நாகவேட்டின் கண் சமாதி கொண்டமர்ந்து
அருள்புரிபவராம் அமலானந்தகுருவும்
ஏற்றம் மிகு சென்னையம்பதியில் அவதரித்து தம்குருநாதர் புகழ்
எண்திசை பரப்பியவராம் லட்சுமணானந்த குருவும்
ஓர்மொழியுட் கருத்தை நூதன விவேகி யுள்ளத்து
உணரச்செய்தவராம் கருணானந்த குருவும்
ஈர்த்தெம்மையாட்கொண்ட வேதாந்த விஞ்ஞான
ஏழுமலையானந்த குருவும் துணை துணையரோ.

அச்சுதாசர் கீர்த்தனை

பல்லவி

எல்லாம் விட்டுப்பார் இலங்கும்
ஒளி எங்கும் பொங்கும் (எல்)

அனுபல்லவி

சொல்லாலே பயனில்லை
துட்டமனமே தொல்லை(எல்)

சரணங்கள்

வில்லாரும் பிரம வித்தை அல்லாத கல்விகளால்
வல்லாண்மை கொண்டு எவர்க்கும் பொல்லாங்கு செய்தழிவ(தெல்)

மாடும் மக்களும் மச்சு வீடும் படைத்தோம் எமக்கு
ஈடு எவர் இங்கு எனவும் மூடமாய்ப்பேசுகின்ற (தெல்)

தீர உதார கம்பீரமும் என்றனைப்போல்
யாருக்கு உள்ளதென்று அகங்காரம் கொண்டு உழலுகின்ற (தெல்)

தாணுவில் புருடன் போல் காணும் தேகாதி எல்லாம்
கோணாதிருக்கும் என்று வீண் அவாக்கொண்டிருப்ப (தெல்)

சந்ததம் அச்சுதனைச் சிந்தித்து உலகில் உய்ய
வந்த மார்க்கம் தனை மறந்து திரிந்து அலைவ (தெல்)

ஓம் தத் சத் பரப்பிரமனே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் அருளிச்செய்த

நாநா சீவ வாதக் கட்டளை

முகவுரை

பரம கருணை நிறைந்த பரமேசுரன் சிருஷ்டியின் ஆதி காலத்தில் சீவர்கள் முத்தியடைய நான்கு வேதங்களை இயற்றி அருளினார். முதலில் சீவர்களின் சித்த சுத்திக்காக கர்ம காண்டத்தில் வருணாசிரம தர்மங்களை செய்து அருளினார். அடுத்து சீவர்களின் விட்சேப நிவர்த்திக்காக பலவித உபாசனைகளை இயற்றியருளினார். முடிவாக ஞானகாண்டத்தில் சிவத்தன்மையின் அடைவு, பிறப்பு இறப்பின் நிவர்த்தி என்ற மோட்சம் கிடைக்க (சீவ-சிவ) சீவபிரமங்களின் அபேதத்தைக் கூறினார்.

ஞானகாண்டத்தில் 108 உபநிஷத்துக்கள் இருப்பினும் ரிக் வேதத்தின் (1) ஐதரேயோபநிஷத்; யஜுர் வேதத்தின் (2) தைத்திரீயோபநிஷத், (3) கடோபநிஷத், (4) சுவேதாசுவதரோபநிஷத் (5) ஈசோபநிஷத், (6) பிரகதாரண்யகோபநிஷத்; சாமவேதத்தின் (7) கேனோபநிஷத், (8) சாந்தோக்யோபநிஷத்; அதர்வண வேதத்தின் (9) நிருசிம்மதாபநீஉபநிஷத், (10) பிரசினோபநிஷத், (11) முண்டகோபநிஷத், (12) மாண்டூக்யோபநிஷத்; ஆகிய இந்த 12-க்கும் ஸ்ரீ சங்கர பகவத் பூஜ்யபாதர் விளக்கங்கள்(பாஷ்யங்கள்) எழுதி உள்ளார்.இதுவும் வடமொழியில் செய்யப்பட்டது.வட மொழியில் வல்லமை இல்லாதோரின் பால் கருணை கொண்ட நம் மகான்கள் வடமொழியில் புலமை பெற்று நம் போன்ற மந்த மதியுடையோர்களுக்காக தமிழ்மொழியில் மேன்மையாக பல நூற்களை இயற்றி இருக்கிறார்கள். அவைகளில் ஒன்றுதான் ஸ்ரீசேஷாத்திரி மகான் அருளிய நாநாசீவ வாதக் கட்டளை என்கின்ற, சீவ பிரம ஐக்கியத்தைப் போதிக்கின்ற இந்த நூலும் தமிழில் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது.

அத்துவிதத்தை போதிக்கின்ற சுருதிகள் பலவுண்டு. (1) ஆத்மபுராணம் - மேற் கூறிய 12 உபநிஷத்துக்களின்விரிவாகும். இதனை ஓதி உணர்ந்தார் சகலமும் கற்றவரே. ஆனால் உத்தம மாணாக்கனால்தான் குரு முகமாக உபதேசம் பெற்று அவற்றை உணர்ந்து தெளிய முடியும். (2) ஸ்ரீபஞ்சதசி - ஆராய்ச்சி மனப்பான்மை உடைய மாணாக்கரால்தான் குருமுகமாக கற்றுத் தெளிய இயலும்.(3) விசார சாகரம் - வேதாந்த வார்த்தைகளை முற்றிலுமாக உணர்ந்தும், குருவின் அனுக்கிரகத்தால் மட்டுமே அறிந்து தெளிய முடியுமாம். இதைப் போன்ற பற்பல வேதாந்த நூல்களும் தமிழ் மொழியில் ஆக்கப்பட்டிருந்தாலும் அவைகளை கற்றுணர மிக சாமர்த்தியம் உடையோர்க்கன்றி ஏனையோர்க்கு துர்லபமாய் இருப்பதால் இந்நூல் சகலரும் எளிதிலுணரும்படி இயற்றியுள்ளார் ஸ்ரீசேஷாத்திரி சுவாமிகள்.

நாநா சீவவாதக் கட்டளை தைத்திரீய உபநிஷத்தின் அனுசாரமாக உலகத் தோற்ற ஒடுக்கங்கள் (ஆரோபம் அபவாதம்) பற்றி விரிவாகக் கூறுகின்றது.வேதாந்தம் பற்றித் தெரிந்து கொள்ள முதலில் இவைகளை ஆராயவேண்டும்.நான்யார்? உடல் வந்தது எவ்வாறு? உலகம் என்பது என்ன? இறையின் பொருள் யாது? என்பனபோன்ற பல கேள்விகளுக்கெல்லாம் அழகாக பதில் கொடுக்கப்பட்டுள்ளது.இதற்கு விளக்கங்கள் அங்கங்கே யாம் கொடுத்திருக்கின்றோம்.இதனை அன்பர்கள் யாவரும் உன்னிப்பாக படித்து தெளியவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

ஜவஹர் சுவாமிகள்

8-1

அவதாரிகை

நாநா சீவவாதக் கட்டளை என்பது அனேகவித சீவர்களைப் பற்றியதான தருக்க முறைமையாம்.ஆரோப அபவாத உத்திகளால் அத்துவித சொரூபத்தை விளக்குவதாம். வேதாந்தம் கற்றுணர விரும்பும் முமூட்சுகளுக்கு ஆரம்ப கால பாட நூலாகும்.குரு மகான்கள் சீடர்களுக்கு உபதேசம் தருவதற்கு முன்,இந்நூலையே போதிப்பர். கைவல்ய நவநீதம், வேதாந்த சூளாமணி,உபநிடதம் போன்ற பல நூல்கள் தோற்ற ஒடுக்கங்களைப் பற்றிப் பல பாடல்களில் கூறுகின்றன. ஆனால் அவைகள் பாடல்களாக இருத்தலாலும் சுருக்கமாக இருப்பதினாலும் குருமார்கள் இந்த நாநா சீவ வாதக் கட்டளையையே உதாரணம் காட்டி விளக்குவார்கள் என்பது சகலருக்கும் அனுபவமாம்.மொத்தம் 36-தத்துவங்களாகவும், அவற்றில் தூலதேக தத்துவம் 6-ம், சூக்குமதேக தத்துவம் 20-ம், காரணதேக தத்துவம் 2-ம் ஈஸ்வர தத்துவம் 2-ம்,பஞ்சபூத தத்துவம் 5-ம், பிரமம் அல்லது சிவம் 1-ம் என பிரித்து விளக்கப்பட்டுள்ளது. மூன்று தேகங்களின் மொத்த தத்துவங்கள் 28 ஆகும். இவைகள் ஒவ்வொரு சீவனாலும் தனித் தனியாக அனுபவிக்கப்படும். ஏனைய பிரமம் அல்லது சிவம் (1)+மாயை (1)+ஈஸ்வரன் (1)+பஞ்சபூதம் (5)= 8-ம் அனைத்து சீவர்களாலும் பொதுவாக அனுபவிக்கப்படும். ஒருவன் மரணப்படின் மற்றையோர் சாகாதபடியினாலும், குருடு, செவிடு, ஊமை போன்ற சூக்கும உடலின் குறைகள் ஒவ்வொருவருக்கு இருக்கவும், மற்றையோர்க்கு இல்லாது இருக்கின்றபடியாலும், வரிட்ட நிலையில் உள்ள சீவன்முத்தர்களுக்கு (சுகர்,வாம தேவர்) அவித்தையும் சீவனும் இறந்திருக்க மற்றையோர்க்கு இறவாமையினாலும் 28- தத்துவங்களும் அவரவர்க்குத் தனித்தனியே அனுபவிக்கப்படும் என்றதாம்.சமுதாயமாய் அல்லது பொதுவாய் அனுபவிக்கப்படும் என்பது: பஞ்ச பூதங்கள் செயல் இழந்தால் உலகத்தினது இருப்பு இல்லாமல் போவதாலும்,மாயை இல்லையாயின் அரசன் இல்லாத நகர் போல சக்தி நியமம் இல்லாமல் போவதாலும்.

ஈஸ்வரனும் இல்லை யெனில் சிருட்டி முதலான பஞ்ச கிருத்தியங்கள் எவையும் இல்லாமல் போவதாலும், பிரமம் இல்லையேல் சகலருக்கும் அறிவில்லாமல் போவதாலுமாம். ஆதலினால் இவைகள் ஒவ்வொன்றையும் தீவிரமாக விசாரிக்க வேண்டும். விசாரணையின் முடிவில் தெளிவு பிறக்கும்.தெளிவின் நிச்சயத்தில் சீவன் முத்தராவர். இத்தூல தேக முடிவில் விதேக முத்திப் பதம் என்றும் அடைந்து இருக்கலாம்.

கற்பிதமான அத்தியாரோபம் என்பது கிளிஞ்சலில் இல்லாத வெள்ளியை இருப்பதாகக் கற்பித்தல் போல, அதிட்டானமான பிரமத்தில் இல்லாத உலகத்தை உள்ளதாகக் கற்பித்துக் கூறுதலால்,விசாரிக்குமிடத்து இது வெள்ளியில்லை கிளிஞ்சல்தான் எனத் தெளிவது போல சுருதி யுத்தி அனுபவத்தால் சைதன்யம் மெய், உலகம் பொய் என ஐயம் திரிபின்றி தெளிதலே அபவாதம் எனப்படுவதாம். மெய்யாக விளங்கும் சைதன்யப் பொருளை அறிய அதத்துவா விருத்தி, தடத்தம், சொரூபம் என மூன்று இலக்கணங்கள் உண்டாம். தூலதேக முதல் பிரகிருதி ஈறாக உள்ள தத்துவங்களை ஒவ்வொன்றாக நியதி செய்து நியதிக்கு உட்படாமல் நின்ற ஆத்மா இத்தகையது என விளக்குதல் அதத்துவா விருத்தியாம்.இந்த மரக்கிளையின் உச்சியில் மூன்றாம் பிறையைக் காட்டுவது போல் பூதம் முதல் சகம் வரையுள்ள நிலைகளை காரணமாகக் கொண்டு அறிவு விளங்கக் காட்டல் தடத்தமாம். சூரியன் பிரகாசவடிவன் என்றாற் போல் ஆன்மாவின் நிஜவடிவு சுயம் பிரகாசம் என விளக்குதல் சொரூபமாம் இந்நூல் அதத்துவாவிருத்தி இலக்கணத்தால் நீ சிவசொரூபம் உனது நிச வடிவம் சத்து, சித்து ஆனந்தம் நித்யம் பூரணம் என்று விளங்க வைப்பதாகும்.

நூல்

(1) சுத்தப் பிரமமாய் இருக்கின்ற சர்வ சாட்சியினிடத்தில் அக்கினியில் சூடு போல அபின்னமாக ஒரு சத்தியுண்டு.

(இ.பொ) சாட்சி அனைத்திலும் உள்ளது; அதுவே சுத்த சிவமாம்; சக்தி அதன் சொரூபமாம்; அதனால் அந்த சக்தி சிவத்திலிருந்து வேறுபடாததாம்; நெருப்பிற்கு உஷ்ணம் சொரூபமாயிருக்கின்றது போல, சிவத்தில் சக்தியாம்.

விளக்கம் : இந்நூலில் தத்துவங்கள் மொத்தம் 36-ஆகக் கூறப்படுகின்றது.36-வது தத்துவமாக இருப்பது **பிரமம்.** இது சுத்தப் பிரமம் என்று அழைக்கப்படுகின்றது.ஏனைய 35-தத்துவங்களும் அசுத்தம் என்று பொருள்படும்.35-வது தத்துவமான **மாயைக்கு** குவிதல் விரிதல் மற்றும் கூட்டு விக்கும்தன்மை முதலியவற்றால் அசுத்தமாம். 34-வது தத்துவமான **ஈஸ்வரனுக்கு** ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் முதலான ஐந்தொழில்களை புரிகின்றதனால் அசுத்தமாம். 33-வது தத்துவமான **ஆகாயத்திற்கு** சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், இடி, மின்னல், மேகங்கள் முதலானவைகளோடு இருப்பதால் அசுத்தமாம். 32-வது தத்துவமான **வாயுவிற்கு** நாற்றங்களை பரவச்செய்தல், சூறாவளிக் காற்றாகி புயலாகுதல் முதலானவைகளால் அசுத்தமாம். 31-வது தத்துவமான **அக்கினிக்கு** புகை பொறிகளோடு, செம்மை நிறத்தோடு தோன்றுதல் முதலானவைகளால் அசுத்தமாம். 30-வது தத்துவமான (நீர்) **அப்புவிற்கு** அலை திவலைகளோடு கூடிய கடல்களாகவும், வடவை அனல் என்கின்ற ஆழிப் பேரலையாக உருவெடுத்தலும் அசுத்தமாம். 29-வது தத்துவமான **பிருதிவிக்கு** (நிலம்) சனங்களாலும், விலங்கினங்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற சகல கழிவுகளும் அசுத்தமாம். 28-வது தத்துவமான **அவித்தைக்கு** ஆதாரமான மூலத்தை மறைப்பதும், உண்மை அறிவு தோன்றவும் இந்த அவித்தை நசிப்பதும் அசுத்தமாம்.27-வதுதத்துவமான **சீவனுக்கு** வருணாசிரமங்கள் முதலானவைகள் அசுத்தமாம்.20-தத்துவங்களாகக் கூறப்படுகின்ற **சூக்கும தேகத்திற்கு** காமக் குரோதாதிகள் அசுத்தமாம்.6- தத்துவங்களாக இருக்கின்ற **தூல தேகத்திற்கு** மலம் ஒன்பது வாயிலிலும் ஒழுகிக்கொண்டிருப்பதால் அசுத்தமாம்.

இப்படிப்போல் அசுத்தம் எதுவுமின்றி நாம ரூபங்கள் இரண்டும் இன்றி, ஒப்பமாய், இரண்டற்று, ஒன்றாய், உணர்வொளி நிறைவாய் நிற்பது **பிரமமாம்.** **பிரமம், சிவம்** எனும் இரண்டு சொற்களும்

ஒருபொருட்கிளவியாம் அதாவது ஒரே பொருளைக் குறிக்கின்ற சொற்களாகும். ஏகமாயும்,அகண்டமாயும், அசங்கமாயும் ,உற்பத்தி நாசமின்றியதாயும், அதிருசியமாயும், நாமரூபங்களற்றதாயும், தன்னையொன்றும் வியாபித்தில்லாததாயும் இருப்பது சுத்த பிரமமாம்.சிவமானது அனைத்திற்கும் ஆதாரமாய் இருக்கின்றதால் எதனாலும் அடக்கமாகாமல் எல்லாவற்றினும் வியாபகமாயிருக்கின்றது என்பதும் அது தன்னில் கற்பிதமாயுள்ள எல்லாவற்றிலும் தோன்றாதிருத்தலால் அணுவுக்கு அணுவாய் இருக்கின்றது என்பதாம்.சீவனை விட பஞ்ச கோசங்களும்,பஞ்சகோசங்களை விட பஞ்சபூதங்களும், பஞ்சபூதங்களை விட விராட்டும், விராட்டை விட இரணிய கருப்பமும், இரணிய கருப்பத்தை விட அவ்வியாகிருதமும் (விகாரப்படாததும் அல்லது பிரிக்கப்படாததும்), அவ்வியாகிருதத்தை விட அவ்வியக்தமும், (வெளிப்படாதிருக்கும் நிலைமையும்), அவ்வியக்தத்தை விட சுத்தப் பிரமமும் வியாபகமாம்.சுத்தப் பிரமத்தை விட வியாபகமாய் இருப்பது வேறு ஒன்றும் இல்லாததால் அதுவே வியாபகமாயிருப்பதால் மகத்துக்கெல்லாம் மகத்தாய் இருக்கின்றதாம்.

இதுவே **சர்வ சாட்சி** என்றும் அழைக்கப்படும்.நனவு,கனவு,உறக்கம் என்று மூன்று விதமான நிலைகளை நாள்தோறும் இச்சீவர்கள் அனுபவிக்கின்றார்கள் என்பது அனைவரது அனுபவம்.நனவில் இந்திரியங்களின் துணைகொண்டு மனம் சர்வத்தையும் உணருகின்றது என்றும் கனவில் இந்திரியங்களின் துணை இல்லாமலேயே சொப்பனக் காட்சிகள் மனத்தால் அனுபவிக்கப்படுகின்றன என்றும், உறக்கத்தில் மனம் ஒடுக்கமடைவதால் சூன்யமே என்றும் அறியப்படுகின்றன.இவற்றை விசாரித்தால் உறக்கத்தில் சூன்யத்தைக் கண்டு அதனை புத்திக்கு உணரவைக்க மற்றொரு பொருள் இருக்க வேண்டும் என்று உணரமுடிகின்றது.

ஆகவே உறக்கத்திற்கு சாட்சியாக இருந்ததே கனவிற்கும்,நனவிற்கும் சாட்சியாக இருக்க வேண்டும் என்று உணர முடிகிறது.ஏனெனில் உறக்கத்தில் கனவை அனுபவித்த மனதும்,நனவில் விழயங்களை அறிய துணையாயிருந்த பொறிகளும் இல்லை.அதனால் உறக்கத்தில் சாட்சியாக இருந்த அப்பொருளே கனவு மற்றும் நனவிற்கும் சாட்சியாக இருக்கின்றது என்பதை இப்போது உணரமுடிகின்றது அல்லவா!ஆகையால் **சர்வத்தையும் உணருகின்ற சாட்சி**,அதாவது மூன்று

அவஸ்தைகளே சர்வம் என்பதனால் மூன்று நிலைகளையும் உணரும் பொருள் சாட்சியாம். ஆதலின் இந்த **சாட்சியே சுத்த பிரமமாம்** என்றார்.

இந்த சர்வ சாட்சியான சுத்தப் பிரமத்தில் அபின்னமாக(வேறுபடாத) ஒரு சக்தி உண்டு. அது அக்கினியில் சூடு போன்று இருக்குமாம்.**அக்கினியில் சூடு போல** என்ற உதாரணம் கொடுக்கப் பட்டு இருக்கின்றது. உருவம், அருவம் சொரூபம் என்ற மூன்றில் உருவம் கண்ணிற்கு விழயமாம். அருவம் என்பது புலன்களுக்கு விழயமாகாததாம். ஆனால் சொரூபம் என்பது வேறுபடாததாம். அதனால் அது சுபாவம் எனப்படுவதாம். ஆகாயத்திற்கு சகலத்திற்கும் இடம் கொடுப்பதும், வாயுவிற்கு சலனமும், அக்கினிக்கு உஷ்ணமும்,அப்புவிற்கு சீதளமும், பிருதிவிக்கு கடினமும் **சொரூபமாம்**. அதனால் **வேறுபடாத** இக்குணங்கள் **சுபாவமாம்**. அப்படியே சர்வ சாட்சியான சுத்த பிரமத்தில் **சுபாவமாக** அதாவது **வேறுபடாததான** ஒரு சக்தி உண்டு என்றார். அக்கினியில் சூடு என்பது வாச்சியார்த்தமாம். சுபாவம் என்று பொருள் கொள்ளல் இலட்சியார்த்தமாம். இவ்விதம் விசாரிக்க வேண்டும்.

****

(2) அந்தச் சக்தி அந்த அதீத பிரமத்தில் அடங்கி இருக்கும் போது அதற்கு சுத்த பிரமம் என்று பேர்.

(இ.பொ) வாக்குக்கும் மனதிற்கும் எட்டாததான சிவத்தில் இச்சக்தி அடங்கி இருக்கும் காலத்தில் அந்த நிலையை சுத்த சிவம் என்று அழைக்கப்படும். இதுவே அதீதமாய் இருக்கும் துரியாதீத(காட சுழுத்தி போன்ற)நிலையாகும்.

விளக்கம் : அதீதம் என்பது அப்பாற்பட்டது அல்லது எட்டாதது என்று பொருள். வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது அல்லது அப்பாற்பட்டது என்பதாம். பிரமம் இந்திரியங்களுக்கு விழயம் ஆகாமையால் பிரத்தியட்ச பிரமாணத்தினாலும், பூதங்கள் அல்லாமையால் அனுமானப் பிரமாணத்தினாலும், இரண்டற்ற பொருளாதலால் உவமானப் பிரமாணத்தினாலும் அறியப்படுவது அன்றாம். இன்னும் சப்தம், அருத்தாபத்தி, அனுபலப்தி, சம்பவம், ஐதீகம் முதலான பிரமாணங்களுக்கும் எட்டாததாம்.அதனால் வாக்கிற்கு அப்பாற்பட்டதாம். சிதாபாசனோடு கூடிய மனத்திற்கு இந்திரியங்களால் சகல உலக விழயங்களும் பிரகாசிக்கப்படுதலால் இந்த மனதிற்கும் பிரமம்

எட்டாததாம்.அதனால் அதீத பிரமம் என்றார். "அற்புதமாம்,சுகானுபவம் மிகும், ஆறாம் புவி துரியம்,அதற்கப்பாலோர், கற்பனை இலாத இடம் சுத்தம், என்று மௌனமாக் காட்டும் வேதம்", என்றும் "அரியதொரு விதேக முத்தி,அதீதம் என்பார்,அது கணக்கில் ஆறாம் பூமி, மருவு சுழுத்தியில், காட சுழுத்தி என்பார், என்பதும் நீ மனத்தில் கொள்வாய்" என்றும் கைவல்யம் கூறுவது இந்த சுத்த பிரமம் என்னும் நிலையில் அடங்கியுள்ள சக்தியின் சொரூபத்தைத்தான் என்பது விசாரிக்கின் புரியும். இத்துரியத்திற்கு அப்பாற் பட்டுச் சத்து அசத்து எனும் கற்பனைகள் ஒரு சிறிதும் இல்லாத இடம் துரியாதீதம் என்றும், கிடைத்தற்கரிய விதேக முத்திப் பதத்தினையே அதீதம் என்றும், இந்நிலையையே காடசுழுத்தி (சக்திகள் அனைத்தும் அடங்கி இருக்கும் அவத்தை) என்றும் பொருள்படும். "சக்தி சத்தனைத்தவிர வேறன்று காண்" என்று மற்றொரு இடத்திலும் கைவல்யத்தில் கூறப்படுவதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. சக்தி சிவமேயன்றி மற்று ஒன்றில்லை என்று பொருள்படும். ஆகவே சிவத்தில் சக்தி அடங்கிய நிலையே சுத்த பிரமமான துரியாதீதப் பதமாம்.

****

(3) அந்தச் சக்தி விசிரிம்பித்து சுத்த பிரமத்தை வியாபிக்கும் போது அப்பிரமம் பரையின் வியாபகத்துள் இருந்தபடியால் அதற்குப் பரப்பிரமம் என்று பெயராம்.

(இ.பொ) அந்த சக்தி விரிந்து சுத்த சிவத்தை சூழ்ந்து கொள்ளும் போது, அச்சிவம் பரையின் ஆளுகைக்குள் இருந்தபடியால் அச்சிவத்திற்கு பரசிவம் என்ற பெயராயிற்று.

விளக்கம் : இந்த சக்தியானது பிரமத்திலிருந்து வெளிப்பட்டு அந்த சுத்த பிரமத்தை சூழ்ந்து கொள்ளும் போது அப்பிரமம் அந்த சக்தியால் வியாபிக்கப்படும் (சூழப்படும்). அங்ஙனமாய் பிரமம் சக்தியால் சூழப்படுங் காலை அச்சக்திக்கு பராசக்தி என்றும்,இந்த பராசக்தியின் வியாபகத்தில் இருக்கின்றபடியால் சுத்த பிரமத்திற்கு பரப் பிரமம் அல்லது பரசிவம் என்ற பெயர் வந்ததுவாம். இதுவே துரிய நிலையாகுமாம்.

****

(4) இலட்சண சூனியமாய் இருக்கின்ற இந்தச் சக்திக்கு பிரம சந்நிதானத்தில், புருட சமூகத்தில் ஸ்திரீக்கு இன்பம் சனித்தாற் போல், அவிகிருத சத்துவ ரஜோ தமோகுணங்கள் உண்டாயின.

(இ.பொ) சிவத்தின் இலட்சணத்தையே உடையதாய் உள்ள இந்த பராசக்திக்கு,தலைவனிடம் சேர்ந்த தலைவிக்கு சந்தோழம் உண்டாவதைப் போன்று, விகாரப்படாத சத்துவம்,இராஜசம்,தாமதம் என முக்குணங்கள் வெளிப்பட்டன.

விளக்கம் : இலட்சணம் என்பது இலக்கணம் என்பதாம். சூனியம் என்பது இல்லாதது. ஆகவே இலக்கணம் இல்லாத சக்தி என்பதால் அந்த பராசக்திக்கு பிரமத்தின் இலக்கணமே கூறப்பட வேண்டும்,அல்லது அதனை இன்னதென்று உரைத்திடப்படாமையால் அவாச்சிய வடிவம் என்று கூற வேண்டும். வாக்கியத்திற்கு உட்படுவது வாச்சியமாம்.அவாச்சியம் என்பது வாக்கியத்தால்அதாவது இலக்கணத்தால் சொல்ல முடியாததாம். அதனால் இலட்சண சூனியமானது என்றார்.மேலும் தலைவனிடம் தலைவிக்கு இன்பம் பிறப்பது போன்று என்று உதாரணம் கூறி விளக்குகின்றார். இவ்வுதாரணத்தின் உட் கருத்து:- புருட ஸ்திரீ சம்பந்தத்தால் புருடனுக்கு ஸ்திரீயால் ஆனந்தமாம். அவ்விதமே ஸ்திரீக்கு புருடனால் ஆனந்தமாம். ஆனால் இவ்விடத்து புருடனால் ஸ்திரீக்கு இன்பம் பிறப்பது போல என்கின்றார். ஆணின் இன்பம் விகாரப்படுவதால் வெளிப்படும். ஸ்திரீயின் இன்பம் விகாரப்படாததால் வெளிப்படாது. பரசிவத்தின் அண்மையில் இருந்த பராசக்திக்கு வேறுபாடற்ற, திரிபுகளற்ற, விகாரப்படாத சத்துவ, ரஜோ, தமோ குணங்கள் உண்டாயின என்பதாம்.

****

(5) இவற்றுள் சுத்த சத்துவத்திற்கு ஆனந்த ரூப சக்தி என்றும், சுத்த ரஜசிற்கு சித்து ரூப சக்தி என்றும், சுத்த தமசிற்கு சத்து ரூப சக்தி என்றும் பெயர்.

விளக்கம்:பிரமத்தின் இலக்கணத்தையே உடையதாயும்,வேறு இலட்சணங்கள் எதுவும் இல்லாமல் இருக்கின்ற பரை என்கின்ற இச்சக்தியினின்றும் உண்டானபடியால் இம்மூன்று குணங்களும் சுத்தம் என்கின்ற இலட்சணம் மட்டுமேயுடையதாகவே உள்ளதாம். அது பிரகிருதியினோடு சம்பந்தமுற்ற போதுதான் அதன் இலட்சணங்கள் விகாரப்படுமாம். இச்சக்தியானது இந்த மூன்று நிலைகளை அடைந்தவுடன் அது சர்வானந்தம் என்கின்ற ரூபமாக சத்துவத்திலும், சர்வப்பிரகாசம் என்கின்ற ரூபமாக ரஜசிலும், சர்வ வியாபக ரூபமாக சத்திலும் இருக்கின்றதால் இந்த முக்குணங்களுக்கும் இப்படிப் பெயர் கூறினார்.

ஆனந்த ரூப சக்தி என்பது இன்ப வடிவமானதும் சிவ காரண சரீரம் என்றும், சித்து ரூப சக்தி என்பது ஒளி வடிவமானதும் சிவ சூக்கும சரீரம் என்றும், சத்து ரூப சக்தி என்பது உண்மை வடிவமானதும் (முக்காலத்தும் இருப்பது) சிவ தூல சரீரம் என்றும் பொருளாம்.

****

(6) **இவற்றுள் காரணமான ஆனந்தரூப சக்தியோடு பரப் பிரமம் கூடி சர்வானந்தம் என்னும் சுழுத்தி அவத்தையை அடைகின்ற போது அதற்கு பரப்பிரமம் என்கின்ற பெயர் போய் பரமானந்தர் என்ற பெயர் வந்தது.**

(இ.பொ) பரசிவமானது,சிவ காரண சரீர ஆனந்த வடிவமாயுள்ள சக்தியோடு கூடவும் சர்வானந்தமான உறக்கம் என்கின்ற அவத்தையை (நிலையை) அடைகின்றதால் அதற்கு பரசிவம் என்ற பெயர் போய் பரமானந்தர் ஆகியது. இதனையே சிவ சுழுத்தி என்பர்.

விளக்கம் : சாக்கிர, சொப்பன, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளும் சகலருக்கும் அனுபவமாதலால் உறக்கமே கனவுக்கும் நனவுக்கும் காரணமாய் இருக்கின்றது. மேலும் சுழுத்தி ஆனந்தமாயும் இருக்கின்றது. அதனையே "நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே" என்று சிவபுராணமும் கூறும் (நள்ளிருள் என்கின்ற சுழுத்தியில் ஆனந்த மேலீட்டினால் நடனம் புரிபவனே என்பது)" காட்சி யாவையும் கண்ணதா,அக்கண்ணும் கரை மாட்சியாகிய அகோசரம், உறக்கமாய் மதித்தேன்" என்கின்றது சசிவன்ன போதம் (திருசியமான அனைத்தையும் காணப்படும் பொருளாய், அக்கண்ணோட்டமும் நீங்கிய மேன்மை பொருந்திய அகோசரப்பொருளை பிரம சுழுத்தி என உணர்ந்தேன்). இந்த சிவ காரண சரீரமான ஆனந்த ரூப சக்தியோடு பரப்பிரமம் கூடிய நிலையே பிரம சுழுத்தி அல்லது சிவ சுழுத்தியாகும்.இது சர்வானந்தமாகிய நிலையானதால் பரமானந்தர் என்ற பெயரை அடைந்தது என்பதாம்.

****

(7) **இந்தப் பரமானந்தர் சித்துரூப சக்தியோடு கூடிச் சர்வப்பிரகாசம் என்னும் சொப்பன அவத்தையை அடைகின்ற போது அவருக்குப் பரமானந்தர் என்ற பெயர் போய்த் தேஜோமயர் என்னும் பெயர் வந்தது.**

(இ.பொ) சிவசுழுத்தி என்கின்ற அவத்தையை அடைந்த இந்த பரமானந்தர் சிவ சூக்கும சரீரமான சித்து வடிவ சக்தியோடு கூடவும்,சர்வப் பிரகாசம் என்கின்ற சொப்பன

அவத்தையை அடைவதால் அதற்கு பரமானந்தர் என்ற பெயர் போய் ஜோதி வடிவினர் ஆகியது. இதுவே சிவ சொப்பனமாம்.

விளக்கம்:- "பண்டை விச்சுவ வாதனை பழுது போய் முழுதும் கண்ட கண்ணதேயாகிய கனவதுவும் கண்டேன்" (முன்புள்ளதான இவ்வுலக வாசனை குற்றங்கள் எல்லாம் நீங்கி சகலத்தையும் தானாகவே பார்க்கின்ற கண்ணோட்டத்தையுடைய பிரம சொப்பனத்தையும் நான் அனுபவித்தேன்.) – சசிவன்னபோதம்.

****

(8) **இந்தத் தேஜோமயர் சத்ரூப சக்தியோடு கூடிச் சர்வ வியாபகம் என்னும் சாக்கிர அவத்தையை அடைகின்ற போது அவருக்குத் தேஜோமயர் என்றும் பெயர் போய்ப் பரிபூரணர் என்னும் பெயர் வந்தது.**

(இ.பொ) சிவ சொப்பன அவத்தையை அடைந்த இந்தத் தேஜோமயர்,சிவ தூல சரீரமான சத்து வடிவ சக்தியோடு கூடவும் சர்வ வியாபகம் என்கின்ற சாக்கிர அவத்தையை அடைவதால் அதற்கு தேஜோமயர் என்ற பெயர் போய் எங்கும் நிறைந்தவர் ஆகியது. இதுவே சிவ சாக்கிரமாம் (நனவாம்).

விளக்கம்: "இறை எனும் பொருள் துரியமே என்னை ஆண்டவனே மறையின் அனந்த நற்பதப்பொருள் நனவென மதித்தேன்" (இறைவன் என்று அழைக்கப்படுகின்றது துரிய நிலையே. என்னைத் தடுத்து ஆண்ட குருவே வேத மகா வாக்கியத்தின் அந்த அசி பதத்தின் ஐக்கியார்த்தம் பிரம சாக்கிரம் என்று உணர்ந்தேன்) - சசிவன்ன போதம்.

****

(9) **இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரமத்தில் சுத்தியில் இரசிதம் போல மூலப்பிரகிருதி என்னும் ஒரு சக்தி உண்டு. அந்தச் சக்தியும் விகிருத சத்துவ, ராஜத தாமதமாகிய முக்குண சொரூபமாக விரிந்து தோன்றும். அம்முக்குணங்களில் சத்துவ குணம் மாயை என்றும், சர்வஞ்ஞுவுபாதி என்றும், ஈசுவர காரண சரீரம் என்றும் சொல்லப்படும். அம்மாயையில் நின்மல ஜலப் பிரதிபிம்பம் போலப் பிரமப் பிரதி பிம்பம் சுலட்சணமாக உள்ளது.அந்தப் பிரதிபிம்ப சைதன்னியம் சர்வஞ்ஞனாகிய ஈசுவரன் என்று சொல்லப்படும்.**

(இ.பொ) எல்லையற்றதாயும்,முழுமையாக இருக்கின்றதாயும், முக்காலத்தும் இருப்பதாயும், சர்வப் பிரகாசமாயும், பரமானந்தமானதாயும் இருக்கின்ற சிவத்தில், கிளிஞ்சலின்

கண் வெள்ளி கற்பனையாகத் தோன்றுவதைப் போல மூலப்பிரகிருதி என்கின்ற ஒரு சக்தி உள்ளதாம். இந்த சக்தியானது முக்குணங்களான சத்துவம்,ராஜசம்,தாமதம் ஆகியவைகளோடு வெளிப்பட்டு மூலப்பிரகிருதியின் சொருபமாகவே இருக்கும்.இதிலுள்ள சத்துவ குணமே மாயை என்று சொல்லப்படும் இதற்கு சர்வஞ்ஞவுபாதி என்றும், ஈசுவரனுக்குக் காரண சரீரமாகவும் சொல்லப்படும்.சுத்த நீரில் மிகத் தெளிவாக ஓர் பொருளின் பிரதிபிம்பமாவது போல, சிவமானது அதனது இலட்சணத்தோடு இந்த மாயையில் பிரதிபிம்பிக்கும். இப்படி பிரதிபிம்பிக்கின்ற சைதன்னியமே, மாயா பிரதிபிம்பரான சர்வஞ்ஞர் என்று அழைக்கப்படுகின்ற ஈசுவரன் ஆகும்.

அகண்டம் என்பது கண்டமின்றியது.எல்லையற்றது என்று பொருளாம். கால, தேச, வஸ்து முதலியவற்றால் அந்தமற்றது என்பது. பிரமம் வியாபகமாயிருக்கிறதால் தேசத்தாலும் (இடத்தாலும்), உற்பத்தி அழிவு இல்லாததால் காலத்தாலும்,எல்லாவற்றினது வடிவமாயும் இருப்பதால் வஸ்துவினாலும் நாசமடைவதன்றாம்.எப்படி ஒரு குடத்தில் தண்ணீர் முழுதாய்பூரிக்கப்பட்டு இருக்கின்றதோ அப்படி பஞ்சகோசங்கள் பஞ்சபூதங்களாலும், பஞ்சபூதங்கள் உலகாலும், இந்த உலகம் மாயா பிரதி பிம்பரான ஈசுவரனாலும், ஈசுவரன் பிரமத்தாலும் பூரிக்கப்பட்டு உள்ளனவாம். இந்த பிரமத்தை பூரிப்பது வேறு ஒன்றும் இல்லாமையால் இதனைப் **பரிபூரணம்** என்றார்." மிகு காலம் மூன்றும் கெடாது இருப்பது சத்து;வேறுபாடு அறிதல் சித்தாம்; மகிழ் காம நுகர்போது, சுகமாகும் அனுபூதி வாழ்வு, என்பது ஆநந்தமே." மூன்று காலத்திலும் பாதிக்கப்படாமையால் சத்தாகவும், எல்லா வற்றையும் அறிதலால் சித்தாகவும், பரமப் பிரேமைக்கு விழயமானதால் ஆனந்தமாகவும் இருப்பதால் **சச்சிதானந்தம்** என்பதாம்.**சுத்தியில் இரசிதம்** போல என்பது காலை அல்லது மாலை நேர சூரிய வெளிச்சத்தில் கடற்கரை மணலில் கிடக்கும் கிளிஞ்சலானது வெள்ளியைப் போன்று கற்பிதத் தோற்றம் தருவது போல, சிவத்தில் அநீர்வசநீயமாகவும் அனாதியாகவும் வெளிப்படும்.

அந்தரியாமியான மாயை.முக்குணங்களில் தூய்மையான முதல் குணமான சத்துவமே மாயை எனப்படும். அதில் பிரதிபிம்பித்த சேதனமே ஈசுவரனாம். ஆதலின் இம்மாயையே ஈசுவரனுக்கு காரண சரீரமாகும். இச்சத்துவகுண பிரதிபிம்பமே சர்வஞ்ஞவுபாதி என்பதால் ஈசுவரன் சர்வஞ்ஞன் என்று அழைக்கப்படுவான். தனது தன்மையை வேறோர் பொருளின் கண் உள்ளதாக்குவது போல் தோற்றுவிப்பது உபாதி என்று சொல்லப்படும். இப்படி மாயையும் தனது தன்மையான சர்வஞ்ஞத்துவம்

(முற்றறிவுடைமை, முழுவல்லமையுடைமை) முதலிய இவைகளை ஈசுவரனிடத்துத் தோற்றுவிப்பதால் சர்வஞ்ஞுவுபாதி என்றார். மூலப்பிரகிருதி என்பது, மூலம்= காரணம்; ப்ர=சத்துவம்; க்ரு=ராஜதம்; தி=தாமதம்.

****

(10) அச்சத்துவகுண மாயை சத்துவத்தில் சத்துவம்,சத்துவத்தில் ராஜதம்,சத்துவத்தில் தாமதம் என்னும் முக்குண சொரூபமாய் இருக்கும். அவற்றுள் சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும் போது அதில் பிரதி பிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தை இரட்சிக்கின்றமையால் விஷ்ணு என்றும், சத்துவத்தில் ராஜதம் பிரதானமாகும் போது அதில் பிரதிபிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தைச் சிருட்டிக்கின்றமையால் பிரஹ்மா என்றும் சத்துவத்தில் தாமதம் பிரதானமாகும் போது அதில் பிரதிபிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தை உபசங்காரம் செய்கின்றமையால் உருத்திரன் என்றும் சொல்லப்படுவான்.இங்ஙனம் சத்துவக்குண கற்பனைச் சொல்லப்பட்டது.

(இ.பொ) சுத்த சத்துவமே மாயை என்பதனால் இக்குணமே மாயைக்கு அதிட்டானமாய் (ஆதாரமாய்) இருக்கும்.இதில் சத்துவம், ராஜதம், தாமதம் ஆகிய முக்குணங்களில் ஒவ்வொன்று முக்கியப்பொருள் அல்லது தலைமைப் பொருளாய் இருக்கும். அப்படிச் சத்துவகுணம் மேம்படும் போது உலகைக் காத்தல் என்னும் தொழில் புரிகின்ற விஷ்ணு என்றும், ராஜத குணம் மேம்படும் போது உலகைப் படைக்கின்ற பிரம்மா என்றும்,தாமதம் மேம்படும் போது அழித்தல் தொழிலைச் செய்கின்ற உருத்திரன் என்றும் மாயா பிரதிபிம்பரான ஈசுவரன் அழைக்கப்படுவார்.இவ்விதமாகச் சத்துவ குணத்தின் செயல் சொல்லப்பட்டது.

விளக்கம்:- அழுக்கின்றிய நீரில் தெளிந்த நிலை மேம்படுவது போலவாம், சத்துவ குண மாயையில் சத்துவ குணம் மேம்படுவது. தெளிந்த நீரில் கலங்கிய நீர் மேம்படுவது போலவாம் சத்துவ குண மாயையில் ராஜத குணம் மேம்படுவது. அவ்விதத்திலேயே வண்டல் நீர் மேம்படுவது போலவாம், சத்துவ குண மாயையில் தமோ குணம் மேம்படுவது. “இல்லையாகிய சத்தியை உண்டு என்பது எப்படி எனக் கேட்கில்? புல்லை ஆதியாம் அசேதனப் பொருள் எல்லாம், பூத்துக் காய்ப்பனப் பாராய்; நல்லையாம் மகனே! அதில் சிற்சத்தி நடந்திடாது இருந்தக்கால்,தொல்லையாய் வரும், சர அசர உயிர்க்கு எ(ல்)லாம் சுபாவங்கள் வேறாமே” என்றும், “கருப்பை, முட்டையுள், பல நிறம் கலந்த சித்திரம் பாராய், அருப்பமாம் சத்தி நியமம் இல்லாவிடில், அரசிலா நகர் போலாம்; நெருப்பு நீரதாம், கசப்புமே மதுரமாம்;நீசனும் மறையோதும், பொருப்பு மேகமாம், கடலெலாம் மண்களாம் புவனம் இப்படிப் போமே” என்றும் கைவல்யம் மாயையைப் பற்றிக் கூறுவதும் காண்க. (மாயாசக்தியால்தான்

புல் முதலான அனைத்தும் வாழ்கின்றன அப்படி சிற் சக்தி இல்லையெனில் இயங்குகின்றதும் இயங்காததுமான உயிர்க்கெல்லாம் தத்தம் சுபாவங்கள் வேறாகிவிடும் என்றும்,கர்ப்பத்திலும் முட்டையிலும் பல வகையாயுள்ள உயிர்களுக்குக் காரணமானதாயும் இருக்கும் இச்சிற்சக்தி இல்லையெனில் அரசன் இல்லாத நகரம் போல்வதாம் என்றும், நெருப்பு நீரைப்போல் சீதளத்தன்மையையும், இனிப்புடைய வெல்லம் கசப்பாவதும், நீசன் வேதங்களை அப்பியாசிப்பதும், மலைகள் மேகமாவதும் கடல்கள் யாவும் மண்ணாகுவதும் போன்று உலக நியமங்கள் மாறிப் போகும் என்று பொருள்). உலகத்தின் தோற்றத்திற்கு உபாதானக் (முதல்) காரணம் மாயையும் அம்மாயையில் பிரதிபிம்பமாயுள்ள ஈசுவரன் நிமித்த காரணனாகவும் சொல்லப்படுகின்றது. மண்குடம், சட்டி, பானை முதலியவை குயவனால் செய்யப்படுகின்றன. இதில் மண் உபாதானக்காரணம். குயவன் நிமித்தகாரணன்.

****

(11) இராசத குணம் அனேக ரூபமாய் பிரிந்து அவித்தைகள் என்றும் சீவ காரண சரீரங்கள் என்றும் சொல்லப்படுவனவாய் ஒன்றற்குஒன்று தாரதம்மியம் உள்ளவைகளாய் இருக்கும்.இவ்வவித்தைகளிடத்தும் மலின சலப் பிரதிபிம்பம் போல் பிரமப் பிரதிப்பிம்பம் உளவாம். இப்பிரதிவிம்ப சைதன்னியங்கள் கிஞ்சிஞ்ஞரென்றும் சிதாபாச சீவரென்றும் பிராஞ்ஞரென்றும் சொல்லப்படும்.

(இ.பொ) இராசத குணம் அவித்தைகளாக பற்பல ஏற்றத்தாழ்வுகளோடு பிரியும். இந்த அவித்தையே சீவ காரண சரீரம் என்று அழைக்கப்படும். இச்சீவர்களும் பலவித வித்தியாசங்களோடும், வேறுபாடுகளோடும் இருப்பர். இந்தப் பல்வேறு அவித்தைகளில் பிரதிபிம்பித்த பிரம சேதனமே சீவர்கள் எனக் கூறப்படுபவர்கள் இவர்கள் அற்பச் செயல் உடையவர் என்றும், சித்தின் நிழலானவர் என்றும், மூன்று அவத்தைகளிலும் தான் சீவன் என்ற பிரஞ்ஞையுடையவன் (நன்றாக அறிபவன்) என்றும் அழைக்கப்படுவான்.

விளக்கம்:- அந்தகாரம் (இருட்டு) ஒன்றாகவே இருப்பினும் அதனது அம்சத்தின் அதாவது கூறுபாட்டின் வித்தியாசத்தால் பலவாகத் தோன்றும். அவ்விதமே அவித்தை ஒன்றாகவே இருந்தாலும் அதன் அம்ச பேதத்தால் பலவாய்த் தோன்றுதலால் அது மலின சத்துவம் எனப்படும். அந்த மலின சத்துவமாயுள்ள அவித்தைகள் தோறும் தோன்றுகின்ற சித்தின் பிரதிபிம்பங்களே சீவராசிகளாம்.சத்துவகுண மாயையை சுத்த தெளிந்த நீருக்கு ஒப்பிட்டும், அவித்தையை அழுக்குடைய நீருக்கும்

ஒப்பிட்டும் கூறியதால் இந்த அவித்தை அசுத்தமாயை என்றும் கூறப்படும். சத்துவ குணம் சுத்தம் என்றும்,ராஜத குணம் அழுக்கு என்றும், தாமத குணம் இருட்டு என்றும் வழங்கப்பெறும். தாரதம்மியம் என்பது சீவராசிகளின் ஏற்றத்தாழ்வு. அவித்தையில் பிரதிபிம்பித்த சைதன்னியமே அழுக்குத்தன்மையால் கிஞ்சிஞ்ஞர், (சிற்றறிவுத் தன்மையுடையவர்) எனப்படும். சித்தின் இலக்கணம் உண்மையில் இல்லாதிருந்தும் சித்தின் நிழலாய்த் தோன்றுபவர். "உன் முகம் போல், கண்ணாடிக்குள் ஒரு முகம் கண்டாற் போல், சின்மய வடிவின் சாயை, சித்து போல் புத்தி தோன்றும்" என்ற கைவல்யப் பாடல் சிதாபாசன் என்பதனை விளக்கும். (கண்ணாடியில் பிரதிபிம்பிக்கும் பிரதிபிம்ப முகம் போல்வதாம், சின்மய வடிவின் நிழலான சிதாபாசன்). சிற்றறிவும்,அற்ப சக்தியும், பராதீனமும் (சுதந்திரமின்மையும்) உடையவராவர்.

பாரமார்த்திக சீவனே சுயம் பிரகாசமின்றியத் தன்மையாலும், அஞ்ஞான விருத்தியுடைமை யாதலாலும் மூன்று அவத்தைகளிலும் மறைமுகத்தன்மையாய் இருத்தலாலும், அவித்தை, அகங்காரங்களின் உபாதியாலும் பிராஞ்ஞன் எனப்படுவான்.

****

(12) இந்த அவித்தைகளும் இராசதத்தில் சாத்துவீகம், இராசதத்தில் இராசதம், இராசதத்தில் தாமதம் என்னும் முக்குண சொரூபங்களாய் உள்ளன. இவற்றுள் இராசதத்தில் சாத்துவீகம் பிரதானம் ஆகும் போது அதில் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன் தத்துவஞான நிஷ்டனாவன். இராசதத்தில் இராசதம் பிரதானம் ஆகும் போது அதில் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன் காமக்குரோத பரனாய் கன்ம நிஷ்டனாவன். இராசதத்தில் தாமதம் பிரதானம் ஆகும்போது அதில் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கங்கள் உடையவனாவன். இங்ஙனம் இராசத குண கற்பனை சொல்லப்பட்டது.

(இ.பொ) இராஜத குணத்திலும் ஒவ்வொரு குணங்களும் மேம்படும்.சத்துவ குணம் மேம்படும்போது அவித்தையில் பிரதிபிம்பமாயிருக்கும் சிதாபாசன் தத்துவ ஞானியாகவும், இராஜத குணம் மேம்படும் போது, அச்சிதாபாசன் காமாதிகளை இயல்பாய் பெற்றவனாகவும், தாமத குணம் மேம்படும் போது சோம்பல், உறக்கம், மயக்கமுடையவனாகவும் கூறப்படும். இவ்விதம் இராஜத குணத்தின் செயல் சொல்லப்பட்டது.

விளக்கம்:- ராஜத குணத்தில் சத்துவம் மேம்படும் போது அவித்தையில் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன், குருவையடைந்து தத்துவங்களை முறையாக விசாரித்து, தூல, சூக்கும, காரண சரீரங்களின் தாற்பரியத்தை

அறிந்து அவைகள் பஞ்சபூத காரியங்கள் என்றும், அவித்தையே இப்பிறவிக்குக் காரணம் என்றும் அறிந்து, அதை நாசமாக்க மகாவாக்கியங்களின் இலட்சியார்த்தத்தை விசாரனை செய்து சீவ பிரம ஐக்கியம் அடைந்து காண்பான் காட்சி காணப்படும் பொருள் எனும் திரிபுடி நீங்கியவனாய், தத்துவஞானியாய் இருப்பான்.

ராஜத குணத்தில் ராஜத குணம் மேம்படும் போது அவித்தையில் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன், இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், ஈரிஷை, அசூயை டம்பம், தர்ப்பம், அகங்காரம் முதலியவைகளைப் பெற்று, உலகவிவகாரத்திலேயே இருப்பான். "ஆடவர் செய்தொழில் மூவகையாகும்; அவித்தை வசத்து (உ)றுநாள்; ஏடணை, மமதை, அகந்தை, உளார்க்கே இக, பர, விவகாரம்"–கைவல்யம். (ஏடணை என்பது இச்சை; மனைவி, புத்திரன், செல்வ சேர்க்கை முதலானவைகளில் ஏற்படுகின்ற ஆசைகளும், உலகத்தில் எனது எனும் அபிமானமும், தேகத்தில் யான் எனும் அபிமானமும் உடையவர்க்கே இகலோக போக சாதன விவகாரங்களும், பரலோக போக சாதன விவகாரங்களும் உடையவராய் இருப்பர் அஞ்ஞானத்தின் வசமாய் உள்ளோர்). ஆகவே இவர்கள் அஞ்ஞானிகளாய் இருப்பர். ராஜத குணத்தில் தமோகுணம் மேம்படும் போது அதில் பிரதிபிம்பமாயுள்ள சிதாபாசன் சத் கருமங்கள் புரியாதவனாய் பிரயோசனம் இல்லாதவனாயும், சோம்பலின் விளைவாக சதா சர்வ காலமும் உறங்கும் நிலையில் இருப்பவனாயும், சகல விஷயங்களிலும் அத்தியாசம் (பிராந்தி) உடையவனாயும் இருப்பன். அசுர சம்பத்துக்களான பேராசை, பிறரை இகழ்தல், பொய்யுரைத்தல், மரண பயம், சதா துக்கித்தல் முதலானவைகள் மயக்கங்களாம்.

****

(13) தாமத குணமானது ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சக்திகளாய்த் தோன்றும். இவ்விரண்டில் ஆவரண சக்தியானது தத்துவ ஞானியும் ஈசுவரனும் தவிர மற்றைச் சீவர்கட்கெல்லாம் சரீரத்திரயம், சிதாபாசன் சாட்சி சைதன்னியங்களின் ஒன்றற்கொன்றுள்ள பேதம் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைக்கப்பட்ட சீவர்கள் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நானென்று அபிமானிப்பர். இந்த அபிமானமே அகங்காரக் கிரந்தி என்றும், சம்சார பந்தம் என்றும் சொல்லப்படும். சற்குருவின் கடாட்சத்தால் ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களில் ஒன்றற்கொன்றுள்ள பேதம் தெரிகின்றதே முத்தி. இப்படி ஆவரண சத்தியின் காரியம் சொல்லப்பட்டது.

(இ.பொ) இனி தாமத குணம் பற்றிச் சொல்லப்படும். இக்குணம் இரண்டு சக்திகளாய் பிரிந்து தோன்றும். அவையாவன:(1)ஆவரணம்; (2) விட்சேபம்.முதலில் ஆவரணத்தின் தொழிலும், அதனை நீக்கும் வழிகளும் இவ்விடத்து ஆராயப்படும். ஆவரண சக்தி என்பது அதிட்டானத்தை மறைக்கும் செயலுடையதாகும். (அதிட்டானம்=பிரமம்). தத்துவஞானி உண்மை உணர்வினால் தன்னை அறிந்தவனாதலால் ஞானியையும், சர்வஞ்ஞத்துவாதி உடையவனாதலால் ஈசுவரனையும் ஆவரண சத்தியால் மறைக்க இயலாது.மற்றோ ஏனைய சீவராசிகள் அனைத்தும் தூல, சூக்கும, காரண தேகங்கள் மற்றும் கூடத்தனுக்கும், சிதாபாசனுக்கும் உள்ள வேறுபாடுகளை அறியவொட்டாது மறைக்கும். அதனால் இந்த மூன்று சரீரங்களையும் தான் என்றே கருதுவர்.இப்படிக்கருதுதலே அகங்கார முடிச்சுக்கள் என்றும், பிறவிக் கட்டுகள் என்றும் கூறப்படும். குருவின் கருணையால் இந்த மறைப்பு சக்தி நீக்கப்பட்டு 29–தத்துவங்களையும் விசாரித்து, அவைகளுக்குள்ள வித்தியாசங்களை அறிவதே மோட்சத்திற்கான வழியாம். இதுவே ஆவரண சக்தியின் செயலும் அதனை நீக்கும் முறைகளுமாம்.

விளக்கம்:- மூலப்பிரகிருதியின் சத்துவ குணத்திலிருந்து மாயாபிரதிபிம்பரான ஈசுவரனின் தோற்றமும், ராஜத குணத்திலிருந்து சீவர்கள் தோற்றமும் சொல்லப்பட்டன.தாமதகுணத்தின் விரிவு இனிச் சொல்லப்படும். இக்குணத்திலிருந்து இரண்டு சக்திகள் உண்டாகும். ஆவரணம் என்றும், விட்சேபம் என்றும் இரு வகையாகும். முதலில் ஆவரண சக்தியின் இயல்பினை அறிய வேண்டும். ஆவரணம் என்பது மறைத்தல் அல்லது மூடுதல். அது எதனை மூடுகிறது அல்லது மறைக்கின்றது? விதிவிலக்குகள் ஏதேனும் உண்டா? தன்னையும் தனக்காதாரமான தலைவனையும் கண்ட ஞானிக்கு இந்த மறைப்பு சக்தி அழிந்துவிடும். பிரம சேதனத்தின் வாச்சியார்த்தமாக இருக்கின்ற ஈசுவரனுக்கு இயல்பாகவே ஆவரணம் இல்லை. இதனையே கைவல்யமும் **“தான்நிகர் தனக்காம் ஈசன் தனையும், தங்களைத் தாம் கண்ட ஞானிகள் தமையும் அன்றி; நாஸ்தி நபாதி என்னும், ஊனிடை உயிர்கள் உள்ளத்து,உணர்விழி குருடாம் வண்ணம்; வான், நிலம், திசைகள், மூடும், மழை நிசி இருள் போல், மூடும்.”** *(ஆவரண சக்தியானது சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடைய தனக்கு ஒப்பின்றிய பரமேஸ்வரனையும், தனது நிஜ வடிவை உள்ளவாறு உணர்ந்த ஞானிகளையும் மறையாது. மழைக்கால இருட்டினைப் போன்று கூடத்தனில்லை (நாஸ்தி), இருந்தால் தோன்றாதா (நபாதி) என்று விவகாரம் செய்யும் சீவர்களின் ஞானப் பார்வையை குருடாக்குமாறு அதனை மறைக்கும் இதுவே ஆவரணசக்தி செய்யும் மோகமாம்). என்றும்,*

"பூன்றமாம் பிரமத்துக்கும், புறத்துள விகாரங்களுக்கும்; ஆன்ற கூடத்தனுக்கும்,அகத்துள விகாரங்களுக்கும்; தோன்றிய பேதம், சற்றும் தோன்றாமல், மறைத்து மூடும்; ஊன்றிய பவ வியாதி, உண்டாக்கும் உபாதி ஈதே." (பிரமத்திற்கும் உலகிற்கும், கூடத்தனுக்கும் அகங்கார முதலியவற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் ஞானப் பார்வைக்கு விளங்காதபடி அப்பேதத்தினை ஆவரண சக்தி மறைக்கின்றது. இப்படி மறைக்கின்றதால் இது பிறவிநோயை உண்டாக்குகின்ற ததாய் இருக்கின்றது) என்றும் ஆவரண சக்தியைப் பற்றிக் கூறும்.

இப்படி ஆவரண சக்தியால் மூடப்பட்ட சீவர்கள் 29- தத்துவங்களையும் தான் என்று கருதுவர்.

தூலம் - 6 + சூக்குமம் - 20 + காரணம் (அவித்தை) - 1 + சிதாபாசன் - 1 + கூடத்தன் - 1 = 29 தத்துவங்கள்;

29 - தத்துவங்களையும் தானென்று கருதுவதால், புத்தியே ஆத்மாவெனும் உணர்வையுடையது.

அகங்காரக்கிரந்தி (அகங்கார முடிச்சு) எனப்படும் சம்சாரபந்தம் ,என்பது பிறப்பு இறப்பு எனும் பவப்பிணியாகும். ஆகவே இவற்றை விசாரித்து உண்மையை அறிவதே முத்தியாகும். ஆவரண சக்தி நீக்கமே முத்தியைக் கொடுப்பதால், முமூட்சுக்கள் வேதாந்த விசாரத்தினை தக்க குருவை அடைந்தும் ஞான காண்டத்தை போதிக்கும் வேதசாத்திரங்களை அப்பியசித்தும் வருவார்கள் எனில், நிச்சயம் ஆவரண சக்தி நாசமாம். அதனால் முத்தியாம்.

****

(14) விட்சேப சக்தியினின்றும் சத்த தன் மாத்திரையான ஆகாயமும், அதினின்றும் பரிச தன் மாத்திரையான வாயுவும் அதினின்றும் ரூப தன் மாத்திரையான அக்கினியும், அதினின்றும் ரச தன்மாத்திரையான அப்புவும், அதினின்றும் கந்த தன் மாத்திரையான பிருதிவியும் தோன்றின.இவ்வைந்து பூதங்கட்கும் காரணமான விட்சேபத்தில் தமசில் சத்துவம், தமசில் இராசதம் தமசில் தமசு என்னும் இவைகள் அற்பம் கருவாக இருந்தமையால்அதன் காரியமாகிய ஐந்து பூதங்களும் முக்குணங்களுடனே தோன்றின. இப்பூதங்கட்குத் தன் மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும், முக்குணப் பூதங்களென்றும் ,சூக்கும பூதங்களென்றும் பெயர் சொல்லப்படும்.

(இ.பொ) தாமத குணத்தின் விட்சேப சக்தியிலிருந்து சப்த சொரூப சுபாவமாயுள்ள ஆகாயம் தோன்றியது. ஆகாயத்திலிருந்து பரிச சொரூப சுபாவமாயுள்ள வாயு (காற்று)

தோன்றியது. வாயுவிலிருந்து ரூப சொரூப சுபாவமான அக்கினி தோன்றியது.அக்கினியிலிருந்து ரச சொரூப சுபாவமான அப்பு(நீர்) உண்டானது. அப்புவிலிருந்து கந்த சொரூப சுபாவமான பிருதிவி(நிலம்) உண்டாயிற்று. இந்த தமோகுணத்து விட்சேப சக்தியிலும் தாமசத்தில் சத்துவம்,தாமசத்தில் ராஜதம், தாமசத்தில் தாமசம் என ஒவ்வொன்றும் மேம்படுவதாலும்,மேலும் இம்முக்குணங்கள் கருபோன்று காரணமானதாலும் இங்கு கூறப்பட்ட ஐந்து பூதங்களும் முக்குணங்களுடன் இருக்கும். இப்பூதங்கள் தனது சொரூப சுபாவங்களோடு இருத்தலால் தன் மாத்திரைகள் என்றும், ஒன்றோடு ஒன்று கலக்காததினால் அபஞ்சீகிருதபூதங்கள் என்றும், முக்குண பூதங்கள் என்றும், சூக்கும சரீரம் தோன்றுவதற்குக் காரணமாய் இருப்பதால் சூக்கும பூதங்கள் என்றும் அழைக்கப்படும்.விட்சேபம்=தோற்றம். மாத்திரை= கால அளவு என்றும் பயன் என்றும் பொருளாகும்.

****

(15 சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்களும் தூல பூதங்களும் தோன்றின. எங்ஙனமெனின்,ஆகாய முதலான ஐந்து பூதங்களின் சாத்வீகாம்ஸத்தில் பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து ஒன்றாகக் கூட்டி வைக்கப்பட்டது அந்தக்கரணம் என்று சொல்லப்படும்.இந்த அந்தக்கரணத்தில் ஆகாயத்தின் அம்ஸம் கூடினதற்கு அடையாளம் அந்தக்கரணமும் ஆகாயத்தைப் போல சகலமான கேள்விகளுக்கும் இடம் கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்கு உள்ளம் என்று பெயர். வாயுவின் அம்ஸம் கூடினதற்கு அடையாளம் அந்தக்கரணமும் வாயுவைப்போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மனம் என்று பெயர்.அக்கினியின் அம்ஸம் கூடினதற்கு அடையாளம் அந்தக்கரணமும் அக்கினியைப் போல் ஈது இன்னதென்று விளக்குவிக்கின்றது.இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்கு சித்தம் என்று பெயர்.பிருதிவியின் அம்ஸம் கூடினதற்கு அடையாளம் அந்தக்கரணமும் பிருதிவியைப் போல் கடினமாக நின்று நான் என்று அபிமானிக்கின்றது. இப்படி அபமானிக்கின்ற விருத்திக்கு அகங்காரம் என்று பெயர்.

(இ.பொ) நுட்பமாய் இருக்கின்ற, இந்த சூக்கும பூதங்களிலிருந்து சூட்சுமதேகங்களும், தூல பூதங்களும் தோன்றின. ஆகாயம், வாயு, அக்கினி, நீர், நிலம் முதலான இந்த பூதங்களின் சத்துவ குண அம்ஸத்திலிருந்து ஒவ்வொரு பகுதி எடுக்கப்பட்டு ஒன்றாக வைக்கப்படும். இது அந்தக்கரணம் என்று அழைக்கப்படும். அந்தக்கரணம் அகத்தின் கண்ணே தொழில்களைப் புரிகின்றதால் இது உட் கருவியாகும்.தானாக வெளிப் போந்து செயலாற்றாது. உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என அந்தக்கரண விருத்திகள் ஐந்து பூதங்களின் அம்ஸத்தோடு செயல்படும். அது எப்படி என்றால் ஆகாயத்தின் அம்ஸமாக எல்லாக் கேள்விகளுக்கும் அந்தக்கரணம் இடம் கொடுப்பதால்

உள்ளம் என்கின்ற விருத்தியாகவும், வாயுவின் அம்ஸமாக சலிப்பதால் மனம் என்கின்ற விருத்தியாகவும், அக்கினியின் அம்ஸமாக சர்வத்தையும் இன்னதென்று விளக்குவிக்கின்றதால் புத்தி என்கின்ற விருத்தியாகவும், அப்புவின் அம்ஸமாக விழயங்களில் அந்தக்கரணத்தை இழுக்கின்றதால் சித்தம் என்கின்ற விருத்தியாகவும், பிருதிவியின் அம்ஸமாக அந்தக்கரணமும் கடினமாக நின்று நான் என்ற அகங்கார விருத்தியாகவும் செயல்படுகின்றன.

உள்ளம்	=	எல்லாவிதமான கேள்விகளையும் தரித்து நிற்கும் விருத்தியுடைய அந்தக்கரணம்.
மனம்	=	சங்கற்ப விகற்ப விருத்தியுடைய அந்தக்கரணம்.
புத்தி	=	நிச்சய விருத்தியுடைய அந்தக்கரணம்.
சித்தம்	=	எண்ணங்களை உற்பத்தி செய்யும் விருத்தியுடைய அந்தக்கரணம். (ஆழ்மனம்)
அகங்காரம்	=	அபிமான விருத்தியையுடைய அந்தக்கரணம்.

அந்தக்கரணம்	தொழில்	அதிதேவதை	கோளகம் (இடம்)
உள்ளம்	இடம் கொடுத்தல்	சதாசிவன்	சிரம்
மனம்	சங்கற்பவிகற்பம்	மகேசன்	கண்டம்
புத்தி	நிச்சயித்தல்	உருத்திரன்	இருதயம்
சித்தம்	ஸ்மரணை	விஷ்ணு	நாபி
அகங்காரம்	அபிமானம்	பிரமன்	சர்வாங்கம்

****

(16) பின்னும் ஆகாய முதலிய பஞ்ச பூதங்களின் சாத்வீக அம்ஸத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்துத் தனித் தனியே வைக்கப்பட்டது, சுரோத்திராதி ஞானேந்திரியங்கள் என்று சொல்லப்படும். இவைகளில் சுரோத்திரம் ஆகாசத்தின் அம்ஸமானபடியால் ஆகாசத்தின் குணமான சத்தத்தை மாத்திரம் அறியும். துவக்கு வாயுவின் அம்ஸமானபடியால் வாயுவின் குணமான பரிசத்தை மாத்திரம் அறியும். சட்சு அக்கினியின் அம்ஸமானபடியால் அக்கினியின் குணமான ரூபத்தை மாத்திரம் அறியும். சிங்நுவை அப்புவின் அம்ஸமானபடியால் அப்புவின் குணமான இரசத்தை மாத்திரம் அறியும். ஆக்கிராணம் பிருதிவியின் அம்ஸமானபடியால் பிருதிவியின் குணமான கந்தத்தை மாத்திரம் அறியும். இப்படி ஐந்தும் ஒன்றோடொன்று கூடாதபடியால் ஒன்று மற்றொன்றின் குணத்தை அறியமாட்டாது. அந்தக்கரணம் ஐந்து மாத்திரையும் ஒன்றாகக் கூடியதானமையால் ஐந்து இந்திரியங்களாலும் ஐந்து விடயங்களையும் அறியும்.அந்தக்கரணம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து ஆகிய பத்தும் சத்துவ அம்ஸமானபடியால் ஞான சாதனமாயின.

(இ.பொ) மறுபடியும் ஐந்து பூதங்களின் சத்துவகுண அம்ஸத்திலிருந்து இன்னுமொரு பாகத்தினை எடுத்துத் தனித்தனியே வைக்கப்படும். இதனை ஞானேந்திரியங்கள் என்று சொல்லப்படும். ஆகாயத்தின் அம்ஸமாக சத்தத்தை மட்டுமே அறியக்கூடிய சுரோத்திரமும் (செவியும்), காற்றின் அம்ஸமாக பரிசத்தை மாத்திரம் அறியக்கூடிய துவக்கும் (தோலும்), அக்கினியின் அம்ஸமாக ரூபத்தை மாத்திரம் அறிகின்ற சட்சுவும் (கண்ணும்), நீரின் அம்ஸமாக இரசத்தை மாத்திரம் அறிகின்ற சிங்நுவையும் (நாக்கும்), நிலத்தின் அம்ஸமாக கந்தத்தை மாத்திரம் அறியும் ஆக்கிராணமும் (மூக்கும்) தனித்தனியே செயல்படும்; ஒன்றோடு ஒன்று கூடாது. அதனால் ஒன்று மற்றொன்றின் குணத்தை அறியாது. கண் பார்க்குமே தவிர கேட்காது, ருசிக்காது அப்படியே மூக்கும் முகருமே தவிர பார்த்தல் கேட்டல் முதலிய மற்றைய இந்திரியங்களின் தொழிலைச் செய்யாது என்பது. ஐந்து பூதங்களின் சத்துவகுண அம்ஸத்திலிருந்து உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக்கரணமும், காது, கண், தோல், நாக்கு, மூக்கு என்கின்ற ஞானேந்திரியங்களும் உண்டாயின. அந்தக்கரணத்தின் ஐந்து விருத்திகளும் ஒன்றாகக் கூடியதால், காது முதலிய ஐந்து இந்திரியங்களினாலும் கேட்டல் முதலான ஐந்து விழயங்களையும் அறியும்.எனவே அந்தக்கரணம் 5-ம் ஞானேந்திரியங்கள்5-ம் சேர்ந்து பத்தும் ஞான சாதனம் என்று அழைக்கப்படும். ஞானேந்திரியம்=(அறியும் கருவி)சப்தம்,பரிசம் முதலானவற்றின் ஞானத்திற்குச் சாதனமான இந்திரியம்.

சுரோத்திரம்	=	சப்த ஞானம் மட்டுமே அறியும்.
துவக்கு	=	பரிச ஞானம் மட்டுமே அறியும்.
சட்சு	=	உருவத்தின் ஞானம் மட்டுமே அறியும்.
சிங்நுவை	=	இரச ஞானம் மட்டுமே அறியும்.
ஆக்கிராணம்	=	கந்த ஞானம் மட்டுமே அறியும்.

ஞானேந்திரிய பஞ்சகம்	வியாபாரம்	அதிதேவதை	கோளகம்
சுரோத்திரம்	கேட்டல்	திக்கு	செவி
துவக்கு	பரிசித்தல்	வாயு	தோல்(அ) உடம்பு
சட்சு	காண்டல்	சூரியன்	கண்
சிங்நுவை	ருசித்தல்	வருணன்	நாக்கு
ஆக்கிராணம்	முகருதல்	அசுவினிதேவதை	மூக்கு

****

(17) பின்னும் ஆகாய முதலான ஐந்து பூதங்களின் இராசதாம்ஸங்களில் பூதத்துக்கு ஒரொரு மாத்திரை எடுத்து ஒன்றாகக் கூட்டி வைக்கப்பட்டவை வியானாதி பஞ்ச வாயுக்களாம். இவைகளில் வியான வாயு, ஆகாயத்தின் அம்ஸமானபடியால் ஆகாயத்தைப் போலவே

சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு, வாயுவின் அம்ஸமானபடியால் வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசி பரியந்தம் அலையும். அபான வாயு அக்கினியின் அம்ஸமானபடியால் அக்கினியைப்போல சடராக்கினியாக உஷ்ணித்துக்கொண்டு குதத்தைப் பற்றி நின்று, உண்ட அன்ன பானாதிகளைச் சீரணிப்பிக்கும். சமான வாயு, அப்புவின் அம்ஸமானபடியால் சரீர நடுவான நாபி ஸ்தானத்திலிருந்து, உண்ட அன்ன ரசங்களை அப்புவைப்போல இழுக்கும். உதான வாயு, பிருதிவியின் அம்ஸமானபடியால் கண்டத்தைப் பற்றிப் பிருதிவியைப்போல கடினமாக நின்று, உண்ட அன்னபானாதிகளைக் கடையும். இந்த ஐந்து வாயுக்களையும் அல்லாமல் வாந்தி பண்ணுவிக்கின்றது நாகன் என்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்மன் என்றும், குறு குறுத்துத் தும்முவிக்கின்றது கிரிகரன் என்றும், கொட்டாவி கொள்ளுவிக்கின்றது தேவதத்தன் என்றும், வீங்குவிக்கின்றது தனஞ்சயன் என்றும், வேறே ஐந்து வாயுக்கள் உண்டென்று சிலர் சொல்லுவர். இவ்வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியால் வேறல்ல.

(இ.பொ) அடுத்து இந்த ஐந்து பூதங்களின் இராஜத குணத்திலிருந்து உண்டாகின்ற சூக்கும தோற்றங்கள் சொல்லப்படுகின்றன.முன்னர் சத்துவகுணத்தில் கூறப்பட்டது போலவே பூதங்களின் இராஜத அம்ஸத்தில் இருந்து ஒவ்வொரு பாகங்கள் எடுக்கப்பட்டு ஒன்றாகக் கூட்டிவைக்கப்படும். இப்படிக் கூட்டிவைக்கப்பட்ட மாத்திரைகள் ஐந்து வாயுக்களாக உண்டாகும். அவைகள் ஆகாயத்தின் கூறாக வியானன் என்கின்ற வாயு சர்வாங்கமும் ஆகாயத்தைப் போலவே வியாபித்திருக்கும். காற்றின் கூறாக பிராணன் என்கின்ற வாயு இருதயத்திலிருந்து மூக்கு வரையிலும் காற்றைப் போலவே அலையும். அக்கினியின் கூறாக அபானன் என்கின்ற வாயு சடாராக்கினியாக அக்கினியைப் போலவே உஷ்ணித்துக்கொண்டு,சாப்பிட்ட உணவுப்பொருட்களைச் சீரணிக்கச் செய்யும்.அப்புவின் கூறாக சமான வாயு சரீரத்தில் மத்தியில் இருக்கின்ற நாபியில் இருந்து கொண்டு சாப்பிட்ட உணவுப் பொருட்களை நீரைப் போலவே இழுக்கும்.நிலத்தின் கூறான உதான வாயு கண்டத்தைப் பற்றிப் பிருதிவியைப் போல கடினமாக நின்று சாப்பிட்ட உணவுப் பொருட்களைக் கடையும்

வியான வாயு	=	எல்லா நாடிகளிலும் செல்லும் சுபாவமுடையது.சரீரம் முழுதும் இருக்கும்.
பிராண வாயு	=	எப்போதும் மேற் செல்லும் சுபாவமுடையது.நாசி நுனியில் இருக்கும்.
அபான வாயு	=	எப்போதும் கீழ் செல்லும் சுபாவமுடையது.குதத்தில் (மல வாயில்) இருக்கும்.
சமான வாயு	=	உணவு, பானங்களை தேகம் முழுதும் செலுத்தும் சுபாவமுடையது. சரீர மத்தியில் (நாபியில்) இருக்கும்.
உதான வாயு	=	மரண காலத்து மேற் செல்லும் சுபாவமுடையது. கண்டத்தில் இருக்கும்.

பிராண பஞ்சகம்	வியாபாரம்	அதிதேவதை	கோளகம் (இடம்)
வியானன்	தாங்குதல்	விசுவயோனி	சர்வாங்கமும்
பிராணன்	சுவாசித்தல்	விசிட்டன்	இருதயம்
அபானன்	சீரணித்தல்	விசுவகர்த்தா	குதம்
சமானன்	இழுத்தல்	ஐயன்	நாபி
உதானன்	கடைதல்	அஜன்	கண்டம்

பிராண வாயுவின் மற்றும் ஒரு ஐந்து தொழில்கள் இருக்கின்றதாகவும் சொல்லப்படுகின்றது. நாகன் எனும் வாயு வாந்தி செயிவித்தலையும்,கூர்மன் என்பது இமைத்தல் தொழிலைச் செய்வதென்றும், கிரிகரன் எனும் வாயு தும்மலுக்குக் காரணமானது என்றும் தேவதத்தன் என்பது கொட்டாவிக்குக் காரணமாகவும், தனஞ்சயன் எனும் வாயு வீக்கத்தைக் கொடுப்பதற்குக் காரணமானது என்றும் கூறப்படும்.

****

(18) பின்னும் ஆகாயம் முதலான ஐந்து பூதங்களின் இராசத அம்ஸத்திலிருந்து பூதத்திற்கு ஓரொரு மாத்திரை எடுத்துத் தனித் தனியே வைக்கப்பட்டவை வாக்கு முதலிய கன்மேந்திரியங்கள் என்று சொல்லப்படும். இவைகளில் ஆகாயத்தினிடமாக வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாகப் பாணி இடுதல் ஏற்றல் செய்யும். அக்கினியிடமாகப் பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் பாயுரு மலசலங்களை வெளியில் தள்ளும். பிருதிவியினிடமாக உபத்தம் சுகத்தைப் பண்ணும். இந்த ஐந்து இந்திரியங்களும் தனித் தனியே இருக்கின்றமையால் ஒன்று மற்றொன்றின் தொழிலைச் செய்யமாட்டாது. வியானன் முதலிய வாயுக்கள் ஐந்து மாத்திரையும் ஒன்றாகக் கூடியதானமையால் கன்மேந்திரியம் ஐந்தின் வழியினாலும் ஐந்து தொழிலையும் செய்து முடிக்கும் இவ்வாயுக்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்தும் இராசத அம்ஸமானமையால் கிரியா சாதனமாயின

(இ.பொ) மறுபடியும் இந்த ஐந்து பூதங்களின் இராசதகுண அம்ஸத்திலிருந்து தனித்தனியாக ஒவ்வொரு மாத்திரை (பாகம்) எடுக்கப்படும். இவைகள் கர்மேந்திரியங்கள் என்று அழைக்கப்படும். ஆகாயத்தின் அம்ஸமாக வாக்கும்,வாயுவின் அம்ஸமாக பாணியும்(கையும்), அக்கினியின் அம்ஸமாக பாதமும்,அப்புவின் அம்ஸமாக பாயுருவும் (மல வாயும்), பிருதிவியின் அம்ஸமாக உபத்தமும் (குறியும்) உண்டாயின. இவைகள் தனித்தனியே இருக்கின்றபடியால் ஒன்றின் தொழிலை மற்றொன்று செய்யாது. பேசுகின்ற தொழிலைச் செய்கின்ற வாக்கு கைகள் செய்யும் எடுதல் ஏற்றல் அல்லது பாதங்களின் தொழிலான போதல் வருதலைச் செய்யாது. இவ்விதத்திலேயே கை, கால் முதலியவற்றிற்குமாம்.அதனதன் தொழில்களை அது அதுவே செய்யும். மற்றொன்றின் செயல்களைப் புரியாது என்பதாம்.

கர்மேந்திரியம் = (தொழில்களைப் புரிகின்ற சாதனங்கள்) பேசுதல், போதல் வருதல் முதலான கர்மங்களுக்குச் சாதனமான இந்திரியம்.

வாக்கு	=	பேசுதல் தொழில் புரியும் இந்திரியம்.
பாணி(கை)	=	ஏற்றல் இடுதல் தொழில் புரியும் இந்திரியம்.
பாதம்(கால்)	=	போதல் வருதல் தொழில் புரியும் இந்திரியம்.
பாயுரு(மலவாய்)	=	மலசலத்தை விடுதல் தொழில் புரியும் இந்திரியம்.
உபத்தம்(குறி)	=	இன்பத்திற்கு சாதனமான தொழில் புரியும் இந்திரியம்.

கர்மேந்திரிய பஞ்சகம்	இடம்	அதிதேவதை	தொழில்
வாக்கு	வாய்	அக்கினி	பேசுதல்
பாணி	கை	இந்திரன்	இடுதல் ஏற்றல்
பாதம்	கால்	உபேந்திரன்	போதல் வருதல்
பாயுரு	குதம்	யமன்	மலசலாதி விடுதல்
உபத்தம்	குய்யம்	பிரஜாபதி	சுகம் செய்தல்

தாமத குணத்தினது விட்சேப சக்தியின் இராசதகுணத்தின் அம்ஸமாக ஒன்றாகக் கூட்டப்பட்ட பிராணன் முதலான வாயுக்கள் ஐந்தும்,தனித்தனியே உருவான கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த10-ம் கிரியா(தொழில் புரியும்)சாதனமாகும். வாயுக்கள் ஐந்தும் கர்மேந்திரியம் ஐந்தின் வழியாக கூறப்பட்ட பேசுதல் முதலான ஐந்து தொழில்களையும் செய்யும்.

****

(19) அந்தக்கரணம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, வாயுக்கள் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகிய இருபது தத்துவங்களும் சூட்சும சரீரங்கள் என்று சொல்லப்படும்.இச்சூட்சும சரீரங்களை மாயாப் பிரதிபிம்பராகிய ஈசுவரன் அவித்தியா பிரதிபிம்பராகிய சீவர்கள் அனேகரானமையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சரீரமாகச் சிருட்டித்து அளித்தான். இப்படிச் சூட்சும சரீர கற்பனை சொல்லப்பட்டது.

(இ.பொ) உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணம் 5- ம் + செவி, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய ஞானேந்திரியங்கள் 5-ம்+ பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் ஆகிய வாயுக்கள் 5-ம்+ வாக்கு, கை,கால், மலவாய், குறி ஆகிய கர்மேந்திரியங்கள் 5-ம் , ஆக மொத்தம் 20-ம் சூட்சும தேகங்கள் என்று சொல்லப்படும். அவித்தையில் பிரதிபிம்பமாயுள்ள சீவர்கள் பற்பலவிதமாய் ஆனவர்களானதால் அவரவர்க்கும் தனித்தனியாக ஒவ்வொரு தேகமாக மாயாபிரதிபிம்பராகிய

ஈசுவரன் சிருட்டித்து அளித்தான். இவ்விதமாக சூட்சும தேகத்தினது தோற்றமும் விவகாரங்களும் கூறப்பட்டன. அவித்தை = சீவ காரண சரீரம்; அபஞ்சீகிருத பூதங்கள் சூட்சும சரீரம்.

****

(20) இனித்தூல பூத உற்பத்திக் கூறப்படுகின்றது. மிஞ்சிய தாமத அம்ஸமாக இருக்கின்ற ஐந்து பூதங்களையும் ஒவ்வொன்றை இரண்டு இரண்டாகப் பகுத்து முதல் பாதி ஐந்தும் ஒவ்வொன்றை நான்கு நான்காகப் பகுத்து இரண்டாம் பாதி ஐந்தில் தன் அம்ஸத்துடன் கூட்டாமல் மற்றைய நான்கு பூதங்களுடன் பூதத்துக்கு அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகச் சேர்க்கின்றது பஞ்சீகரணம் என்று சொல்லப்படும்.

(இ.பொ) இதுவரையிலும் மூலப்பிரகிருதியின் தாமத குணத்தினது ஆவரணம், விட்சேபம் என்ற இரண்டு சக்திகளில் ஆவரணம் மூடல் என்றும் அஞ்ஞானத்திற்குக் காரணமானது என்றும், விட்சேபத்திலிருந்து அபஞ்சீகிருத பூதங்களின் தோற்றமும் அவைகளின் சத்துவ, இராஜச குணத்திலிருந்து 20–தத்துவங்களாக தோன்றிய சூட்சும சரீர உற்பத்தியும் விளக்கமாகக் கூறப்பட்டது. இனி விட்சேப குணத்தின் தாமத குணம் மட்டுமே எஞ்சியுள்ளது. அதனது செயல் இங்கே கூறப்படும். சூட்சும பூதங்களிலிருந்து சூட்சும தேகங்கள் உண்டாயின. அது போலவே தூல பூதங்களிலிருந்து தூல தேக உற்பத்திக் கூறப்படுகின்றது. இம்முறைக்கு பஞ்சீகரணம் செய்யப்படுதல் என்று பெயர். பஞ்சீகரணம் செய்யப்பட்ட பின்பு இவைகள் தூல பூதங்களாகும். தாமத குண அம்ஸமாக இருக்கின்ற ஐந்து பூதங்களை இரு சமமான கூறுகள் ஆக்கப்படும். இதனால் ஒவ்வொரு பூதமும் இரண்டு சம கூறுகளாக மொத்தம் 10 கூறுகளாக இருக்கும். ஒரு பகுதியானது பிரித்தவாறே வைக்கப்படும். மற்றொரு பகுதியை திரும்பவும் நான்கு சம கூறுகளாக பிரிக்கப்படும்.

இப்படிப் பிரிக்கப்பட்ட அரைக்கால் பகுதிகளை ஒவ்வொன்றையும் தனது அம்ஸத்துடன் சேர்க்காமல் பிற பூதங்களின்1\2 கூறோடு சேர்க்க வேண்டும். உதாரணமாக ஆகாயத்தை இருசம கூறுகளாகப் பிரித்து அதன் ஒரு பாதியை அப்படியை வைத்துவிட்டு, மற்றொரு பாதியை நான்கு சம கூறுகளாகப் பிரித்தால்

ஆகாயம் = 1\2ஆகாயம் + 1\2 ஆகாயம்; இரு சம கூறுகளாகப் பிரிக்கப்படது.

1\2 ஆகாயத்தை 4–ல் பகுத்தால் =1\8 ஆகாயம்+1\8 ஆகாயம் + 1\8 ஆகாயம் + 1\8 ஆகாயம் என்று வரும். இவ்விதமே வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி ஆகியவைகளையும் பிரிக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின்

வாயு = 1\2வாயும்+ 1\8வாயு+ 1\8வாயு+ 1\8வாயு+1\8வாயு

அக்கினி = 1\2அக்கினி+1\8அக்கினி+1\8அக்கினி+1\8அக்கினி+1\8அக்கினி

அப்பு = 1\2அப்பு+1\8அப்பு+1\8அப்பு+1\8அப்பு+1\8அப்பு

பிருதிவி = 1\2பிருதிவி+ 1\8பிருதிவி+ 1\8பிருதிவி+ 1\8பிருதிவி+ 1\8பிருதிவி

இனி பஞ்சீகரணம் சொல்லப்படும். பிரிக்கப்பட்ட ஒருபூதத்தின் ஒவ்வொரு 1\8 பகுதிகளையும் தனது அம்ஸமான 1\2 பகுதியுடன் கூட்டாமல் மற்றைய பூதங்களின்1\2 பகுதிகளுடன் 1\8 யாகிய கூறுகளைச் சேர்க்க வேண்டும்.

1\2 ஆகாயம்+1\8வாயு+1\8அக்கினி+1\8அப்பு+1\8பிருதிவி

1\2வாயு+1\8 ஆகாயம்+1\8அக்கினி+1\8அப்பு+1\8பிருதிவி

1\2 அக்கினி+1\8 ஆகாயம்+1\8வாயு+1\8அப்பு+1\8பிருதிவி

1\2 அப்பு+1\8 ஆகாயம்+1\8வாயு+1\8அக்கினி+1\8பிருதிவி

1\2பிருதிவி+1\8 ஆகாயம்+1\8வாயு+1\8அக்கினி+1\8அப்பு.

இப்படிப் பூதங்கள் பஞ்சீகரிக்கப்பட்ட பின் இப்பூதங்கள் தூலபூதங்கள் அல்லது மகாபூதங்கள் எனப்படும்.

****

(21) இங்ஙனம் பஞ்சீகரிக்கப்பட்ட தூலபூதங்களில் ஆகாயத்தில் பரிச ரூப ரச கந்தமாகிய நான்கு குணங்களும் வியாப்பியமானமையால் அதிரிசியமாம். நிஜ குணமாகிய சப்தம் திரிசியமாம். வாயுவில் ரூப ரச கந்தமாகிய மூன்று குணங்களும் வியாப்பியமானமையால் அதிரிசியமாம்.காரண குணமாகிய சப்தமும் நிஜகுணமாகிய பரிசமும் திரிசியமாம்.அக்கினியின் ரச கந்தமாகிய இரண்டு குணங்களும் வியாப்பியமானமையால் அதிரிசியமாம். காரண குணங்களாகிய சப்த பரிசமும் நிஜ குணமாகிய ரூபமும் திரிசியமாம். அப்புவில் கந்த குணம் வியாப்பியமானமையினால் அதிரிசியமாம்.காரண குணங்களாகிய சப்த பரிச ரூபமும் நிஜகுணமாகிய ரசமும் திரிசியமாம்.பிருதிவியில் காரண குணங்களாகிய சப்த பரிச ரூப ரசமும் நிஜ குணமாகிய கந்தமும் திரிசியமாம்.

(இ.பொ). இங்ஙனமாய் பஞ்சீகரிக்கப்பட்ட பின்னர், சூக்குமமாயிருந்த அபஞ்சீகிருத பூதங்கள், தூல பூதங்களாயின. ஆகாயத்தின் உண்மை குணமான சப்தம் திரிசியமாய், செவிக்கு விழயமாய் இருக்கும். மற்றைய பரிச, ரூப, இரச, கந்தகுணங்கள் வெளிப்படாமல் அடங்கி இருக்கும். அதனால் அது அதிரிசியமாம். அதாவது வெளிப்படாதாம். இவ்விதமேவாயுவிற்கும் அதன் காரணகுணமான சப்தமும் வாயுவின் உண்மை குணமான பரிசமும் வெளிப்படும்.ரூப,இரச,கந்த குணங்கள் வெளிப்படாதாம்.அக்கினிக்கு காரணகுணங்களான சப்தமும் பரிசமும், உண்மை குணமான ரூபமும் வெளிப்படும். அப்புவிற்கு, காரணங்களான சப்த, பரிச,ரூப குணங்கள் அதன் உண்மை குணமான இரசமும் வெளிப்படும். பிருதிவிக்கு காரணங்களான சப்த, பரிச, ரூப, ரச குணங்கள் அதன் உண்மை குணமான கந்தமும் வெளிப்படும்.

பூத பஞ்சகம்	குணம்	வியாபாரம்	தர்மம்	அதிதேவதை	கோளகம் (இடம்)
ஆகாயம்	சத்தம்	இடம் கொடுத்தல்	வெளி	சதாசிவன்	சிரம்
வாயு	சத்தம் பரிசம்	சலித்தல்	பரிசம்	மகேசன்	கண்டம்
அக்கினி	சத்தம் பரிசம் ரூபம்	நிச்சயித்தல்	வெப்பம்	உருத்திரன்	இருதயம்
அப்பு	சத்தம் பரிசம் ரூபம் ரசம்	திரட்டல்	நெகிழ்ச்சி	விஷ்ணு	நாபி
பிருதிவி	சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம்	பொறுத்தல்	கடினம்	பிரமன்	சர்வாங்கம்

****

(22) சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் தோன்றினாற் போலப்பஞ்சீகரிக்கப்பட்ட தூல பூதங்களினின்றும் ஆறு தத்துவமாய் நால்வகைப் பிறப்பாய் மூவகைச் சாதியாய் இருக்கின்ற தூல சரீரங்கள் தோன்றின. இவற்றில் ஆறு தத்துவங்களான சருமம், உதிரம், மாமிசம், சநாயு, அஸ்தி, மச்சை ஆகிய இவைகளாம். நால்வகைப் பிறப்புகளாவன:—சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம் ஆகிய இவைகளாம். மூவகைச் சாதிகளாவன:—இகலோக பரலோக புத்தியைத் தருகின்ற மானுட சரீரங்கள் உத்தம சாதியாம். பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தியை மாத்திரம் தருகின்ற பசு பட்சி முதலிய சரீரங்கள் மத்திம சாதியாம். இருவகைப் புத்தியையும் மறைத்திருக்கின்ற மரம் கொடி செடியாதிகள் அதம சாதியாம். இப்படிப் பிருதிவி தத்துவமாய் இருக்கின்ற பூலோகத்தில் தோற்றுகின்றது போல அப்பு அக்கினி வாயு ஆகாயம் எனப்பட்ட தத்துவங்களாய் நிரனிறையே இருக்கின்ற பிதிர் லோக, தேவலோக, யட்ச, கந்தர்வ லோக, சித்தர் லோகங்களிலும் சந்திரன் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதை, யட்ச, கந்தர்வ, சித்தர்கள் சரீரங்கள் உத்தம சாதியாம். காமதேனு, ஐராவதம், அன்னம்,கருடனாதிய சரீரங்கள் மத்திம சாதியாம். கற்பக விருட்சம் பாரிஜாதமாகிய சரீரங்கள் அதம சாதியாம்.

(இ.பொ) சூக்கும பூதங்களிலிருந்து 20- தத்துவங்களாக சூட்சும தேகங்கள் உண்டானது போல, இங்கும் தூல பூதங்களிலிருந்து தூல தேகங்கள் உண்டாயின. தூலதேகம்-6 தத்துவங்களாகவும், நான்கு வகையான பிறப்புக்களும், மூன்று வகையான சாதிகளுமாய் தோன்றின. பிருதிவி தத்துவமாய் இருப்பது பூலோகமாம் தூலதேக தத்துவங்கள்-6=சருமம்(தோல்), இரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, மச்சை; நான்கு வகை பிறப்புக்கள் - சராயுஜம் = கர்ப்பத்திலிருந்து உண்டாகுபவைகள்; அண்டஜம் = முட்டையிலிருந்து உண்டாகுபவைகள்; சுவேதஜம் = வியர்வையிலிருந்து உண்டாகுபவைகள்; உத்பிஜம் = விதை முதலியவற்றிலிருந்து உண்டாகுபவைகள்; மூன்று வகை சாதிகள் = இவ்வுலகத்திலுள்ள போகங்களையும், சொர்க்காதி போகங்களையும் அதனுடைய சாதனங்களையும் அறிகின்ற அறிவுடைய உத்தம சாதி-மனித சரீரங்கள்; இவ்வுலக போகத்தை மாத்திரம் அறியக்கூடிய அறிவுடைய மத்திம சாதி-பசு பட்சியாதிகள்; இந்த இரு வகையான இகலோக, பரலோக புத்தி மறைபட்டிருக்கும் அதம சாதி-மரம், செடி, கொடியாதிகள்; இதேபோலவே ஆகாய முதலான தத்துவங்களுக்கும் சொல்லப்பட்டன.

****

(23) தூல சரீரமே அன்னமய கோசம். சூட்சும சரீரம் மூன்று கோசமாயிருக்கும். எங்ஙனம் எனில், பிராணவாயுவும் கன்மேந்திரியமும் கூடிப் பிராணமயகோசம். மனதும் ஞானேந்திரியமும் கூடி மனோமயகோசம். புத்தியும் ஞானேந்திரியமும் கூடி விஞ்ஞானமய கோசம். காரணசரீரமே ஆனந்தமய கோசம். இப்படிப் பஞ்சகோசங்கள் சொல்லப்பட்டன.

(இ.பொ) இப்போது கோசங்களைப்பற்றிக் கூறப்படும். கோசம் =உறை; அன்னமயமாகிய பிருதிவியில் ஒடுங்கும் தூலதேகம் அன்னமயமாகும்.ஒருவனை அவனது ஆடைகள் மறைப்பது போல, மத சாதிகளை யுடையவன், மனிதன், ஆண், பெண் முதலான இவை போன்ற அத்தியாசங்களால் (கற்பிதங்களால்) அன்னமயத்தாலான இந்த தூலசரீரத்தையே நான் என்று கொண்டு அகம் சப்தத்தின் அர்த்தமான ஆத்மாவை மறைக்கின்றதால் இந்த தூலதேகம் அன்னமயகோசம் என்று அழைக்கப்படும்.

பிராணமய கோசம் : கர்மேந்திரியங்கள் ஐந்துடன், பிராணன் முதலான வாயுக்கள் ஐந்தும் கூடியது; நான் பசிதாகமுடையவன், பலமுடையோன் அல்லது வலிமையற்றோன் முதலான தொழில்களையுடையவன் போன்ற கற்பிதங்களால் இந்தப்பிராணமயம் ஆத்மாவை மறைக்கும்.

மனோமயகோசம் : மனம் ஞானேந்திரியம் ஐந்துடன் கூடிய நிலை; நான் சங்கற்க விகற்பமுடையவன், சமுசயமுடையவன், காமக்குரோதமுடையவன், சுகதுக்கங்களையுடையவன் முதலிய கற்பிதங்களால் இந்த மனோமயமும் ஆத்மாவை மறைக்கும்.

விஞ்ஞானமயகோசம்: புத்தி ஞானேந்திரியம் ஐந்துடன் கூடியநிலை.நான் கர்த்தா, புத்திமான், உலக விழயங்கள் அனைத்தையும் அறிகின்றவன் என்னும் இது போன்ற பற்பல அத்தியாசங்களால் இந்த விஞ்ஞானமயம் அகம் பதப்பொருளின் நிஜ வடிவான ஆத்மாவை மறைக்கும்.

ஆனந்தமயகோசம் : உறக்கத்தில் சொரூப அஞ்ஞானமாய் இருக்கின்ற நிலை; இதனை ஆனந்தமயம் என்றது ஆனந்த ரூப விருத்திகளையுடையது.நான் சுகமுடையோன், பிரியன், அறியேன் என்னும் விவகாரங்களால் உண்டான அத்தியாசங்களால் இந்த ஆனந்தமயமும் ஆத்மாவை மறைக்கும்.

****

(24) ஆறு (6) தத்துவங்களாயுள்ள தூலசரீரத்தில் இருபது (20) தத்துவங்களாயுள்ள சூட்சும சரீரம் இருக்கின்றது. அஃது எங்ஙனம் எனில், கன்மேந்திரியங்களில் வாக்கும், ஞானேந்திரியங்களில் சிங்ஙுவையும் வாயிலிருக்கும். உதான வாயுவும், மனதும் கண்டத்தில் இருக்கும். பிராணவாயுவும், புத்தியும் இருதயத்தில் இருக்கும். சமானவாயுவும், சித்தமும் நாபியில் இருக்கும். அபான வாயுவும், பாயுருவும் குதத்தில் இருக்கும். வியான வாயுவும், துவக்கிந்திரியமும், அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்து இருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியில், சட்சு இந்திரியமும், காதினுள்ளே சுரோத்திர இந்திரியமும் மூக்கு நுனியிலே கிராண இந்திரியமும், கழுத்துக்கு மேல் தனித்தனியே இருக்கும்.இப்படித் தூல சரீர தத்துவங்கள் ஆறு(6). அதில் குடி புகுந்த சூட்சும சரீர தத்துவங்கள் இருபது (20). ஆகத் தத்துவங்கள் இருபத்தாறும் (26) பஞ்ச பூதங்களின் காரியங்களானபடியினாலே, ஒருமைப்பாடாகக் காரிய சரீரம் என்று சொல்லப்படும்.அவித்தையில் பிரதிவிம்பனாயுள்ள சிதாபாசன் சாக்கிரத்தில் இந்த (26)இருபத்தாறு தத்துவங்களுடன் கலந்து நிற்கும் போது விசுவன் என்றும், வியாவகாரிக சீவன் என்றும் சொல்லப்படுவன்.சொப்பனத்தில் தூல சரீரத்தை விட்டுச் சூட்சும சரீரத்துடன் கூடி நின்றபோது தைஜசன் என்றும், பிராதிபாசிக சீவன் என்றும் சொப்பன கற்பிதன் என்றும் சொல்லப்படுவன்.சுழுத்தியில் காரிய சரீர தத்துவங்கள் (26) இருபத்தாறையும் கைவிட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தி இருக்கும் போது பிராஞ்ஞன் என்றும் பாரமார்த்திக சீவன் என்றும் சொல்லப்படுவன்.இப்படி சீவனுக்கு மூன்று சரீரங்களும் மூன்று அவத்தைகளும் சொல்லப்பட்டன.

(இ.பொ) அந்தக்கரணம், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், பிராணாதி வாயுக்களாகிய சூட்சும சரீரங்கள் தூலதேகத்தில் இருக்கின்ற இடங்களும், தூலதேகம், சூட்சும சரீர தத்துவங்களின் துணையோடு தொழில் புரிகின்றதாலும், பஞ்ச பூதங்களின் காரியங்களானபடியாலும் இந்த இரண்டு தேகங்களும் காரிய தேகங்கள் என்று கூறப்படும்.

சிதாபாசன் இந்த–26 தத்துவங்களுடன் கலந்து நிற்பான். சாக்கிர முதலான அவத்தைகளில் இருக்கின்ற சீவனது பெயர் முதலானவைகளும் சொல்லப்படுகின்றன.

விளக்கம் :

சாக்கிரம் = நனவு அல்லது விழிப்பு நிலை என்று கூறப்படும். இதன் இடம் புருவ மத்தி.

விசுவன் = சாக்கிரத்தில் மூன்று தேகத்திற்கும் அபிமானியாகிய சிதாபாச சீவனே விசுவன் என்று அழைக்கப்பெறுவான். தூலசரீர வியட்டி அபிமானி, விட்சேபரூபன், சரீரி, கர்த்திரு, 14 போக்திரு, சம்சாரி, பாவாத்மா, விஞ்ஞானமயன், துவம் பதார்த்த முக்கியார்த்தன் முதலியவை விசுவனது பரியாய பெயர்களாம். தேகேந்திரியம் முதலியவற்றில் வியாபித்திருப்பவன் என்று பொருள் கொள்ளினும் அமையும். வியாவகாரிய சீவன் : மனைவி மக்கள் முதலிய விவகாரங்களோடு கூடிய சீவன்;

சொப்பனம் : ஞானேந்திரியங்கள்,கர்மேந்திரியங்கள் ஒடுங்கி நிற்க,நனவில் நிகழ்கின்ற விவகாரங்களின் வாசனையாலோ அல்லது பூர்வ கர்ம ஸ்மிருதி வாசனையாலோ சீவனுக்கு உண்டாகும் நிலை;

தைஜசன் : கனவில் தூலதேகத்தின் அபிமானத்தை விட்டு சூக்கும,காரண சரீரங்களின் அபிமானியாகிய சீவன். இந்த தைஜசன் சூட்சும சரீர வியட்டி அபிமானியாவன்.சூரியன் முதலான ஒளிப்பொருள்கள் இல்லாமலும் விளங்குகின்றவன் என்று பொருளாம்.

பிராதிபாசிக சீவன்:பிராதிபாசிக சத்தையுடையவன் என்பதாம். பிராதிபாசிக சத்தை என்பது கிளிஞ்சலில் வெள்ளி போல் தோற்றியும் பொய்யாவது. சொப்பன விழயங்கள் கற்பிதமாய் இருத்தலால் அந்நிலையிலுள்ள சீவன் பிராதிபாசிகனாவன்.

சொப்பன கற்பிதம்: எவனால் சொப்பனம் கற்பிக்கப்பட்டதோ அவன் சொப்பன கற்பிதன் ஆவன்.

சுழுத்தி : பறந்து செல்லுகின்ற தனது குஞ்சுகளையெல்லாம் தன் இறக்கைக்குள் அடக்கிக்கொண்டு தூங்கும் கோழியைப் போல காரியங்கள் எல்லாவற்றையும் உள்ளில் வைத்து அவற்றின் சமஸ்காரத்துடன் கூடி ஆத்மாவிடத்தினில் எந்நிலையும் அல்லாது நிர் அவத்தையாயிருக்கும் காரணசரீரத்தில் பொருந்தி நிற்கும். இதற்கு குணம் தமசு; இருதயம்-

இடமாம்; பிராஞ்ஞ சீவனும் ஈசுவரனும் ஏகமாய் பிரமானந்த விழய போகத்தை மாயாவிருத்தி என்னும் சூட்சும கரணத்தால் அனுபவிக்கும் காலம் சுழுத்தி அவஸ்தை.

பிராஞ்ஞன்: சுழுத்தியில் தூல சூட்சும தேகங்களின் அபிமானத்தை விட்டுக்காரண தேகம் ஒன்றையே அபிமானித்துள்ள சீவன். அவித்தையான காரண சரீரத்தில் தாதான்மிய (ஒன்று மற்றொன்றைப்போல் தோற்றுவது) அத்தியாசத்தால் நான் அஞ்ஞானி என்று அபிமானிப்பவனாகிய சீவன் பிராஞ்ஞன் எனப்படுவான் என்று பஞ்சதசி கூறும்.

பாரமார்த்திக சீவன்: பாரமார்த்திக சத்தையையுடைய பரசிவத்தோடுள்ள சீவன். முக்காலத்தும் பாதிக்கப்படாதபொருள் என்பது.

அவஸ்தை	சரீரம்	தத்துவம்	பெயர்	தொழில்
சாக்கிரம்	தூலம் சூக்குமம்	26 தத்துவம்	விசுவன்	வியவகாரிய சீவன்
சொப்பனம்	சூக்குமம்	20தத்துவம்	தைஜசன்	பிராதிபாசிக சீவன்
சுழுத்தி	காரணம்	1 தத்துவம்	பிராஞ்ஞன்	பாரமார்த்திக சீவன்

****

(25) பிரம சைதன்னியமும் சாக்கிரத்துக்குச் சாட்சியாய் இருக்கும்போது **சீவாத்மா** எனவும், சொப்பனத்திற்கு சாட்சியாய் இருக்கும் போது **அந்தராத்மா** எனவும், சுழுத்திக்கு சாட்சியாய் இருக்கும்போது **பரமாத்மா** எனவும் அவத்தாத்திரய சாட்சியாய் இருக்கும்போது **ஞானாத்மா** எனவும் **கூடத்தர்** எனவும் சொல்லப்படும்.

(இ.பொ) சிவ சைதன்னியம் நனவு நிலையில் சீவாத்மா என்றும், கனவு நிலையில் அந்தராத்மா என்றும், உறக்க நிலைமையில் பரமாத்மா என்றும், இந்த மூன்று நிலைமைகளிலும் ஞானாத்மா என்றும், கூடத்தர் என்றும் சாட்சியாயிருக்கும்.

சீவாத்மா : எல்லா விவகாரங்களையும் சாட்சிமாத்திரமாக அறிந்து கொண்டு தான் எவ்வித விகாரமும் அடையாமல் எக்காலத்தும் அழிவில்லாத சீவிதப்பொருளாய் இருப்பது.

அந்தராத்மா : சொப்பன அவத்தையின்(நிலைமையின்) சாட்சி மாத்திரமாய் இருக்கும்பொருள்.

பரமாத்மா : சுழுத்தியில் உள்ள சீவனைப்போல் அவித்தையில் சம்பந்தம் இல்லாது சகலத்திற்கும் சாட்சியாய் இருக்கும் பொருள்.

ஞானாத்மா : அறியப்படும் பொருள் ஆகாமல் எக்காலத்தும், எல்லாவற்றையும் அறிந்து கொண்டு தானே தானாய் விளங்கும் பொருள்.

கூடத்தர் : கொல்லரது உலைக்களத்தில் இருக்கும் பணையே கூடம் என்று அழைக்கப்படும். எவ்வளவு அடிகள் அதன் மேல் வைக்கப்பட்ட பொருள்களை அடிப்பினும் கூடம் எனும் பணை, விகாரம் அடையாது அது இருந்தவாறே இருக்கும். அப்படியே கொல்லன் என்கின்ற மனம் விவகாரங்கள் எனும் அனேக அடிகளை அடித்தாலும் ஆத்மாவானது எவ்வித விகாரமும் அடையாமல் அப்படியே நிர்விகாரமாய் இருக்கும்.அதனால் ஆத்மா கூடத்தர் எனப்படும். அவத்தாத்திரய சாட்சி :- நனவு, கனவு, உறக்கமாகிய மூன்று நிலைகளுக்கும் சாட்சியாயிருப்பது.

****

(26) ஈசுவரனுக்கு மூன்று சரீரங்களும் மூன்று அவத்தைகளும் சொல்லப்படுகின்றன.கற்பித பிரபஞ்ச வடிவாகத் தோற்றுகின்ற தூல பஞ்ச பூதங்களும் அவற்றில் தோன்றிய மூன்று சாதிகளாய் இருக்கின்ற தூல சரீர சமட்டியும் கூடி ஈசுர தூல சரீரம் என்றும்,**விராட்டு** என்றும் சொல்லப்படும்.இதனுடனே கூடிச் சாக்கிர அவத்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் **வைசுவாநரன்** என்றும், இந்த இரு வகைக்கும் அதிட்டான சைதன்னியம் **பிரமன்** என்றும் சொல்லப்படும். சூக்கும பூதங்கள் ஐந்தும் அவற்றில் தோன்றிய சூக்கும சரீர சமட்டியும் கூடி ஈசுர சூக்கும சரீரம் என்றும், **இரண்ணிய கருப்பம்** என்றும் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சொப்பன அவத்தையைப் பொருந்துகின்ற ஈசுவரன் **சூத்திராத்மா** என்றும், இந்த இருவகைக்கும் அதிட்டான சைதன்னியம் **விஷ்ணு** என்றும் சொல்லப்படும். இந்தத் தூல சூக்குமமாகிய இரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை ஈசுர காரண சரீரம் என்றும், அவ்வியாகிருதம் என்றும் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சுழுத்தி அவத்தையைப் பொருந்துகின்ற ஈசுவரன் அந்தரியாமி என்றும் இந்த இருவகைக்கும் அதிட்டான சைதன்னியம் **உருத்திரன்** என்றும் சொல்லப்படும்.

(இ.பொ) சீவனது சரீரமும்,அவத்தைகளும் கூறப்பட்டது போல, ஈசுவரனுக்கும் சரீரமும், அவத்தைகளும் சொல்லப்படும்.ஒருமை என்பது வியட்டியாகும்.பன்மை என்பது சமட்டியாகும்.

மரம் எனல் வியட்டி ; காடு எனல் சமட்டி
விராட்டு = தூல பஞ்சபூதங்களும், இப்பூதங்களில் தோன்றிய தூலசரீரமும் சமட்டியாகக் கூடியது ஈசுவரனின் தூல சரீரமாகும்.

வைசுவானரன் = எல்லா சீவராசிகளிடத்திலும் நான் எனும் அகம் விருத்திக்கு (அபிமானமாய்) காரணமாயிருப்பது.

அதிட்டானம் = எந்தபிரமத்தை அறியாமையினால் உலகக் கற்பனை தோன்றுகின்றதோ எந்த பிரமத்தை அறிவதால் உலகத்தோற்றம் நிவர்த்தியாகின்றதோ, அந்தப்பிரமமே அதிட்டானம் (ஆதாரம்) எனப்படும்.

இரண்யகர்ப்பன் = பிரகாசமுடைய ஈஸ்வரனின் சமட்டி சூக்கும சரீரம்.

சூத்திராத்மா = ஈஸ்வரனின் சமட்டி சூக்கும சரீரம் வியாபகமானது.

சூத்திரம் = நூல்; பஞ்சிலிருந்து ஆக்கப்படுவது என்றும் பொருள்; நூல் எப்படி குறுக்கும் நெடுக்குமாய் பின்னப்படுவதால் ஆடைகளாகி நூல் வியாபகமாகின்றதோ அப்படியே உலகத்தின் தோற்றம் வியாபகமாம். அதனால் சூத்திராத்மாவாம்.

அவ்வியாகிருதம் = சிருஷ்டிக்கு முன் வெளிப்படாதது.
விகிருதம் = நாம ரூபங்களாக வெளிப்படுவது.
அந்தரியாமி = உள்ளிலிருந்து நடத்துபவன்.

அவஸ்தை	சரீரம்	பெயர்	அபிமானி	அதிட்டானம்
சாக்கிரம்	தூல சரீரம்	விராட்டு	வைசுவானரன்	பிரமன்
சொப்பனம்	சூக்கும சரீரம்	இரண்யகர்ப்பன்	சூத்திராத்மா	விஷ்ணு
சுழுத்தி	காரண சரீரம்	அவ்வியாகிருதம்	அந்தரியாமி	உருத்திரன்

****

(27) சீவன்தனது மூன்று நிலைகளிலும் தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற 27– தத்துவங்களுடனும் நானென்று கலந்து நிற்பது போல,ஈசுவரனும் தன் மூன்று அவத்தைகளிலும் தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற 32–தத்துவங்களுடனும் கலந்து நிற்பன். சீவன் தன் சரீரம் மாத்திரமே கலந்து நிற்பன். ஈசுரவன் தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பன்.இந்த இரு வகைக்கும் (சீவனுக்கும் ஈசுவரனுக்கும்) சாட்சியாய் இருக்கின்ற பிரம சைதன்னியமும் சகல சரீரங்களிலும் சகல பிரபஞ்சங்களிலும் நிறைந்து அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக்கிரமித்து(மீறி) எல்லையற்று இருக்கும்.

விளக்கம் : சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி சீவனது மூன்று நிலை; தூல, சூக்கும, காரணம் (அவித்தை) சீவனின் மூன்று சரீரங்கள்; தூலசரீரதத்துவம் - 6 + சூட்சும சரீர தத்துவம் - 20 + காரண சரீர தத்துவம் - 1 = மொத்தம் - 27 தத்துவங்கள்;

ஈசுவரனது -32 தத்துவங்கள் = சமட்டி தூல சரீர தத்துவம்-6+சமட்டி சூட்சும சரீர தத்துவம்-20+இவற்றின் வாசனையாடு கூடிய காரண சரீர தத்துவம்-1+பஞ்ச பூதங்கள் - 5;

****

(28) சீவன்தன் தூலசரீர விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்:–தூல சரீர தத்துவங்கள்–6, சூட்சும சரீரத் தத்துவங்கள்–20, சீவன் ஈசுவரன் அவித்தை வித்தை பிரமம்–5 ஆக தத்துவங்கள்–31. சூட்சும விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்:–சூட்சும சரீர தத்துவங்கள்–20, சீவன் ஈசுவரன் அவித்தை வித்தை பிரமம்–5, ஆக தத்துவங்கள்–25. காரண சரீர விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்:– சீவன் ஈசுவரன் அவித்தை வித்தை பிரமம்–5. சீவ விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்:– சீவன் ஈசுவரன் பிரமம்–3. சாட்சி விவகாரத்திற்கு உள்ள தத்துவம்:– சாட்சி–1.

விளக்கம்: சீவன் சாக்கிர அவத்தையில் தூல சரீரத்தோடு கூடிச் செய்கின்ற தொழில்கள் தூலசரீர விவகாரம் எனப்படும். சூட்சும சரீரத்தோடு கூடிச் சொப்பன அவஸ்தையில் சீவன் செய்யும் தொழில்கள் சூட்சும விவகாரங்கள் எனப்படும். சுழுத்தி அவஸ்தையில் சீவன் காரணசரீரத்தோடு கூடிச் செய்யும் தொழில்கள் காரண சரீர விவகாரமாகும். (சூன்யத்தை அனுபவித்தேன் என்பதும் ஆனந்தமாய் உறங்கினேன் என்று ஆனந்தமயனாய் இருந்து தொழிற்பட்டிருத்தல்); சீவன் தனது உண்மை சொரூப பிரத்தியக்கு (கூடத்த) ஆன்மாவை அறிந்து ஆத்மானந்தத்தை அனுபவிப்பது சீவ விவகாரம்; தானே தானாயிருந்து அகண்டாகார விருத்தியும் இல்லாது துரியாதீத அவத்தையில் பிரம சொரூபமாயிருத்தல் சாட்சி விவகாரம் என்று சொல்லப்படும்.

****

(29) ஈசுரன்தன் தூல சரீர விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்:– சமட்டி தூல சரீர தத்துவம்–6, சமட்டி சூட்சும சரீர தத்துவம்–20, சமட்டி சீவன், அவித்தை–2, தூலபூதம்–5, ஈசுரன் வித்தை பிரமம்–3, ஆக–36. சூட்சும சரீர விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்: சமட்டி சூட்சும சரீர தத்துவங்கள்–20,சமட்டி சீவன், அவித்தை–2, சூட்சும பூதம்–5, ஈசுரன் வித்தை பிரமம்–3, ஆக–30.காரண சரீர விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள் ஈசுரன் பிரமம்–2.பிரம விவகாரத்திற்கு உள்ள தத்துவம் பிரமம்–1. இந்திரிய விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்:– இந்திரியம்–1, தூலசரீர தத்துவங்கள்–6, அந்தக்கரணம்–5, வாயுக்கள்–5, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்–5, ஆக–22. மனோராஜ்ஜிய விவகாரத்திற்குக் கூடும்

தத்துவங்கள்:– அந்தக்கரணம்–5, சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரமம்–5, ஆக–10. இப்படித் தத்துவங்களின் தோற்றமும் நிலையும் சொல்லப்பட்டன.

விளக்கம்: இந்திரிய விவகாரம் என்பது இந்திரியங்களின் தொழிலாகும்.உதாரணமாக கண் என்கின்ற இந்திரியத்தின் தொழிலுக்கு தூல சரீர விழிகள் (மாமிசம்) வேண்டும்; சூக்கும சரீர தத்துவமான அந்தக்கரணம் (மனம்), வாயுக்கள்(பிராணன்) வேண்டும்; சீவன் ஈசுவரன் அவித்தை மாயை பிரமம்-5 சமுதாயமாகும் அதே போல் மனோராச்சிய விவகாரத்திற்கு இந்த ஐந்து தத்துவங்களோடு அந்தக்கரணம் மாத்திரம் இருந்தால் போதும்;

****

(30) இனித் தத்துவங்கள் ஒடுங்குகின்ற வழி சொல்லுகின்றோம்.சகல சீவர்களிடத்தும் இருக்கின்ற தூல சரீரங்கள் அனைத்தும் தமக்கு ஆதாரமான தூலபூதங்களில் மடிந்து பூதமாத்திரமாக ஒடுங்கும். இந்த தூலபூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரையான தாமத குண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரண்ணியகருப்ப அவத்தை நிலைமை என்று சொல்லப்படும். சூட்சும சரீர தத்துவங்கள் 20–ம் கட்டுவிட்டுப் பூதங்களின் சாத்வீக குணமும் இராசத குணமுமாக ஒடுங்கும். அஃது எங்ஙனம் எனில், சகல பிராணிகளிடத்தினும் இருக்கின்ற அகங்காரமும் ஆக்கிராணமும் உதானவாயுவும் உபத்தமும் பிருதிவியில் ஒடுங்கும். சித்தமும் சிங்ஙுவையும் பாயுருவும் அப்புவில் ஒடுங்கும். புத்தியும் சட்சுவும் அபானனும் பாதமும் அக்கினியில் ஒடுங்கும். மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவில் ஒடுங்கும். உள்ளமும் சுரோத்திரமும் வியானனும் வாக்கும் ஆகாயத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும்.

இச்சூட்சும பூதங்களும் பிருதிவி அப்புவில் கரைந்து ஒடுங்கும்.அப்புவும் அக்கினியில் சுவறி (வற்றி) ஒடுங்கும். அக்கினியும் விளக்குப் போல் வாயுவில் அணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாயத்தில் ஓய்ந்து ஒடுங்கும். ஆகாயமும் விட்சேப சக்தியில் ஒடுங்கும். ஆவரண சக்தியும் விட்சேப சக்தியும் மூலப்பிரகிருதியின் தமோகுண மாத்திரமாய் ஆலமரம் ஆல விதையில் ஒடுங்கினாற் போலப் பின்னும் ஒரு சிருட்டிக்கு வித்தாக அவித்தையிலும் மாயையிலும் ஒடுங்கும். இந்த மாயையும் அவித்தையும் அதிநுண்மையான மூலப்பிரகிருதி என்னும் விந்து தத்துவமாக(சக்தி தத்துவமாக) ஒடுங்கும். அவ்விந்து தத்துவமும் பாம்பு பழுதை மாத்திரமாக ஒடுங்கியது போலத் தனக்கு அதிட்டானமான பிரம சைதன்னிய மாத்திரமாக ஒடுங்கும்.இப்படித் தோன்றி ஒடுங்கிய தத்துவங்கள் –35. அவையாவன:– பூதங்கள்–5; தூல சரீர தத்துவங்கள்–6; சூட்சும சரீர தத்துவங்கள்–20; காரண சரீரமான மாயை அவித்தை–2;அவைகளில் பிரதிபிம்பமாயுள்ள ஈசுரன் சீவன்–2; ஆகிய இவைகளாம். இப்படித் தோன்றி ஒடுங்கிய பொய்ப்

பொருள்கள் யாவும் மெய்ப் பொருள் ஒன்றே எனவும், அதுவே(மெய்ப்பொருளே) சுபாவ சித்தமாகவும் (இயற்கையாக பெறப்பட்டதாகவும்) நிஜமாகவும் இருக்கின்ற தன் வடிவம் எனவும், அறிந்தவனே பிரமஞானியாம். இங்ஙனம் தத்துவங்களின் ஒடுக்கம் சொல்லப்பட்டது.

விளக்கம் : முன்னர் தத்துவங்கள் தோற்றிய முறைப்படியே தத்துவங்களின் ஒடுக்கமும் ஆலமரம் ஆலவிதையில் ஒடுங்கினாற் போல என்று உதாரணம் காட்டப்படுகின்றது. விதையில் வேர், கிளை, இலை முதலியவைகளின் வேறுபாடுகள் விளங்காது. ஆலமரமானது அவ்விதையில் சூட்சுமமாயிருப்பினும் விளங்காதது போல பிரபஞ்ச தோற்றமும் அதிட்டானமாயிருக்கின்ற பிரமத்தில் ஒடுங்கும். தூல தேகமுதல் மாயை வரையிலான தோன்றி ஒடுங்கும் இந்த -35 தத்துவங்களும் பொய்ப்பொருள்கள் என்றும், அந்த பொய்ப்பொருள்களின் இன்மை அல்லது இன்மையையுடையது மெய்ப்பொருளாயுள்ள அத்துவிதீய பிரம சொரூபம் என்பதுமாம். காணப்படும் பொருள்ான அனைத்துப் பொய்ப்பொருள்களும் மெய்ப்பொருளானத் தன்னைத்தவிர பிறிதொன்றில்லை என்று உணர்பவனே பிரமஞானியாம்.

****

(31) தத்துவம் 36–ல், பூதம்–5, மாயை–1, மாயாப் பிரதிபிம்பரான ஈசுரன்–1,பிரமம்–1 ஆகிய இந்த எட்டும் சகல பிராணிகட்கும் சமுதாயமாக அனுபவிக்கப்படும். எங்ஙனமெனில், சகலருக்கும் பிருதிவி இறக்கில் ஆதாரம் இல்லை. அப்பு இறக்கில் குளிர்ச்சி இல்லை. தேயு இறக்கில் பாகமில்லை. வாயு இறக்கில் பிராணன் இல்லை. ஆகாயம் இறக்கில் அவகாசமில்லை. மாயையும் மாயாப் பிரதிபிம்பரும் இறக்கில் சகல சமயங்கட்கும் தெய்வம் இல்லை. பிரமமில்லையாயின் சகலருக்கும் அறிவில்லை.ஆதலால் இந்த எட்டும் எல்லோருக்கும் சமுதாயமாம்.

மற்றைய–28 தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக்காக(வேறு வேறாக) அனுபவிக்கப்படும். அஃது எதனாலெனின், ஒருவனுக்குத் தூலசரீரம் இறக்கில் எல்லோருக்கும் இறவாதபடியினாலும், சூட்சும சரீரத்தில் ஒருவனுக்கு அங்கவைகல்யம் வந்தால் எல்லோருக்கும் வராதபடியினாலும், முத்தராய் இருந்த சுகர் வாமதேவராதியர்கட்கு அவித்தையும் சீவனும் இறந்து போயிருக்க மற்றையர்க்கு எல்லாம் இறவாதபடியினாலும், இந்த இருபத்தியெட்டு (28) தத்துவங்களும் பிருதக் என்பதில் சந்தேகம் இல்லை. இந்ததத்துவங்கள் 36–ல் எப்போதும் தானாகவே காணப்படுகின்ற தத்துவம்–1 எப்போதும் தனக்கு அன்னியமாகவே காணப்படுகின்ற தத்துவங்கள்–7. தானாகவும் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்படுகின்ற தத்துவங்கள்–28. அஃது எங்ஙனமெனின் அவத்தாத்திரய சாட்சியாகிய பிரம சைதன்னியம் எல்லா அவத்தைகளிலும் தானாகவே விளங்குகையினாலும் மற்ற தத்துவங்கள் போல்

அன்னியமாகக் காணப்படாதபடியினாலும் பிரம சைதன்னியம் ஒன்றுமே தானாகக் காணப்படுகின்றது.

பஞ்ச பூதம், மாயை, மாயா பிரதிபிம்பராகிய ஈசுரன் ஆகிய இந்த ஏழும் தன் தன் தொழிலான பொறுத்தல், பிண்டீகரித்தல், தகித்தல், உலர்த்தல், இடம் கொடுத்தல், தசாவதாரம் பஞ்சகிருத்தியங்கள் ஒருகாலத்திலும் தன் தொழிலாகக் காணப்படாமையினால் தனக்கு அன்னியமே அல்லாமல் தானாகமாட்டா. மற்றைய–28 தத்துவங்களுள் நான் பிராமணனாதிய வருணத்தன்; பிரமசாரியமாதிய ஆச்சிரமி; நான் ஆண்,பெண், கருவல்,சிவலை,கட்டையன், நெட்டையன்; நான் பருத்தேன், இளைத்தேன் என்று தானாக வழங்கப்படுகின்ற தூலசரீரங்கள் ஆறு தத்துவங்களும் ,மற்றொரு வேளையில் தனக்குப் புறம்புபட்டு என்மாடு,என் கன்று என்றாற் போல,என் சரீரம் பருத்தது, இளைத்தது, நரைத்தது ; என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற்று என்று வேறாக வழங்கப்படுகின்றமையினாலும்,நான் கண்டேன், கேட்டேன், பரிசித்தேன், வசனித்தேன், கொடுத்தேன், நடந்தேன், சங்கற்பித்தேன், நிச்சயித்தேன் இந்தப்பஞ்சத்திற்கு சீவித்தேன் என்று தானாக வழங்கப்படுகின்ற சூட்சும சரீர தத்துவம் 20–ம் மற்றொருவேளையில் தனக்குப் புறம்புபட்டு என்னுடமை,என் வீடு என்றாற் போல, என் கண், என் காது,என் துவக்கு, என் வாக்கு,என் கை, என் கால் என் மனம்,என் புத்தி,என் பிராணன் என்று வேறாக வழங்கப்படுகின்றமையினாலும், நானறியேன், நானறிவேன், என்று தானாக வழங்கப்படுகின்ற அஞ்ஞானமும் சீவனும் மற்றொரு வேளையில் புறம்புபட்டு என் அஞ்ஞானம் என்சீவன் என்று வேறாக வழங்கப்படுகின்றமையினாலும் இந்த –28 தத்துவங்களும் தானாகவும் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்படுகின்றனவாம்.

விளக்கம் : 28 தத்துவமாய் இருக்கின்ற சீவராசிகள் அவரவர்க்காக கர்ம வினைகளாக அனுபவிப்பார்கள். ஒருவரால் செய்யப்பட்ட வினைகள் மற்றவர்க்கு பொருந்தாது. உதாரணமாக ஒருவனுக்கு மரணம்நேரிடில் மற்றவர்களும் இறக்காமையும், ஒருவனுக்குவியாதிவரில்,மற்றவர்களுக்கு அதனால் உடல் பாதிக்கப்படாமையும்,சுகர், வாமதேவர்களுக்கு காரண சரீரமான அவித்தை நசிக்கப்பட்டு இவ்வுலகில் வாழ்ந்தும்,ஆனால் ஏனையோர்களுக்கு இக்காரண சரீரம் ஒழியாமல் இருந்தபடியாலும் இந்த 28 தத்துவங்களும் அவரவர்க்காகத்தான் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. அதே போல பஞ்சபூதங்கள் இல்லையெனில் அதன்காரியங்கள்எதுவும் நடவாது. அதனால் அவை சகலருக்கும் பொதுவாகவே அனுபவிக்கப்படும். பிரமம் இல்லையாயின் சித்துப்பிரகாசம் இல்லாமல் போவதால் ஓரறிவு முதல் ஆறறிவு உள்ளசீவராசிகள் எவற்றிற்கும் அறிவில்லாமல் போகும். ஈசுவரன் இல்லையென்றால் உலகிலுள்ளஅனைத்து மதங்களுக்கும் தெய்வம் இல்லாமல்

போகும். எனவே 8-தத்துவங்களும் பொதுவாகும். 28 தத்துவங்களும் தனிப்பட்டு அவரவர்க்காக ஆகும். இந்த 36 தத்துவங்களில் சகலருக்கும் பொதுவானதும், தனிப்பட்டதும் கூறப்பட்டது.

பஞ்சபூதங்களின் பொறுத்தல் முதலான தொழில்களும்,ஈசுவரனது ஆக்கல் காத்தல்அழித்தல், மறைத்தல், அனுக்கிரகித்தல் முதலான ஐந்தொழிலும், மாயையினது பத்து அவதாரங்களும் சீவனது தொழில் அல்ல. சீவனுக்கு அன்னியமான தொழிலாகும். அதனால் இந்த-7 தத்துவங்களும் தானாகாமல் அன்னியமானவைகளாகும். ஆனால் மற்றைய -28 தத்துவங்களும் தானாகவும் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்படும். நான் பிரம்மச்சாரி, ஆண், அல்லது பெண் என இது போன்று தானாக சொல்லப்படுகின்ற தூல சரீரத்தின் 6-தத்துவங்களும், பிறிதொரு சமயங்களில் எனது உடல் இளைத்தது, பருத்தது என்று தனக்கு அன்னியமாய் சொல்லப்படுவதாலும் இந்த தூலசரீரம் அன்னியப்படுகின்றது. இவ்விதமே நான் பார்த்தேன் கேட்டேன் முதலியவற்றால் தானாகவும், எனது பொறிகள், எனது மனம் , எனது புத்தி என்று தனக்கு வேறான பொருள்களாய் சொல்லப்படுவதால் அன்னியமாகவும் சூட்சும சரீரம் இருக்கின்றது.நான் அறிவேன்அல்லது அறிகிலேன் என்பதால் தானாகவும். என்சீவன் எனது அஞ்ஞானம் என்று தனக்கு வேறாகப் பேசப்படுவதால் அன்னியமாகவும் காரண சரீரம் இருக்கின்றது. அதன் காரணத்தாலேயே இந்த28-தத்துவங்களும் தானாகவும் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்படுகின்றன.

****

(32) சங்கை;:- இந்த -28 தத்துவங்களும் தானானால் சாட்சியைப்போல் ஒரு தன்மையாகத் தோற்ற வேண்டுமே யல்லாமல் பஞ்ச பூதங்களைப் போலத் தனக்கு அன்னியமாகத் தோற்ற நியாயமில்லை. தனக்கு அன்னியமானால் எப்போதும் புறம்பாகத் தோற்ற வேண்டுமே யல்லாமல் தானாக வழங்கற்கு நியாயமில்லை.தானுமாய்த் தனக்கு அன்னியமுமாய் இருக்குமெனல் இருட்டு ஆதித்தியன் என்றாற் போலும் வெள்ளாள தீட்சிதன் என்றாற் போலும் விருத்தமாம் (விரோதமாம்) எனின்?

விளக்கம் : தூலதேகம்,சூட்சும தேகம்,காரணதேகம்,சீவன் ஆகிய 28-தத்துவங்களும் சாட்சி அல்லது கூடத்தனைப் போல தானாகவே இருக்கவேண்டும் அல்லது பஞ்ச பூதங்களை போல் அன்னியமாக இருக்க வேண்டும். அவ்விதமாகாது தானாகவும் தனக்கு அன்னியமாகவும் இருப்பது எங்ஙனம்? என்பது. இருட்டு ஆதித்தியன்,வெள்ளாள

தீட்சிதன்என்று சொல்வதைப் போல இருக்கவே இயலாத ஒன்று என்ற உதாரணமும் கூறப்படுகின்றது. சூரியன் இருட்டினை அகற்றுபவன். ஆகவே இருட்டு ஆதித்தியன் என்பது பொருந்தாத ஒன்றாகும். அவ்விதமே வெள்ளாளன் என்பவன் தொழில் விவசாயம் முதலான தொழில்கள் புரிபவன். தீட்சிதன் என்பவன் வேதங்களை ஓதி பூசை முதலியவைகளைச் செய்பவன். ஆகவே இந்த இரண்டு வேலைகளும் அந்தந்த வருணத்தைச் சேர்ந்தவர்க்காகும். அதனால் தீட்சிதன் வெள்ளாளன் ஆகமாட்டான் என்பதாம். இப்படியே தானாகின்ற தத்துவங்கள் அன்னியமாகும் என்பதும் சந்தேகத்திற்குரியது என சம்சயித்தலாம்.

****

(33) உத்திரம்:– பரமார்த்தமாகத் தான் என்கின்றது ஒருவகையும் அத்தியாசத்தினாலே தான் என்கின்றது ஒரு வகையும் ஆக இருவகையுமுண்டு. சாட்சி சைதன்னியத்தை தான் என்கின்றது பரமார்த்தமல்லாமல் உபசாரமல்ல. தனக்கு அன்னியமாகிய 28–யும் தான் என்கின்றது கட்டையைக் கள்ளன் என்றாற் போலும்; பழுதையைப் பாம்பு என்றாற் போலும் புத்திராதிகளைத் தான் என்றாற் போலும் அத்தியாசமேயன்றி உண்மையல்லாமையால் விருத்தம் அன்றாம். ஆகையால் அஞ்ஞான காலம் தொடங்கித் தானல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள்–7. இப்படிப்பட்ட விவேகம் உண்டாகிய பின்பு தானல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள்–28. ஆகிய இந்த 35– தத்துவங்களையும் அதற்குள்ள குணம் குறிகளுடனே கூட்டிக் காண்கின்ற அறிவானது கடத்தைப் பார்க்கின்றவன் கடத்துக்குப் புறம்பாகவே கடத்தைப் பார்க்கின்றது போல, அவைகட்கு அன்னியமாகவே இருந்து அவைகளை அறிகிறதென்றும், 36–ம் தத்துவமாகிய அதுவே தான் என்றும் தானே பரமசிவம் என்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவதரிசனம் உடையவனாம்.

விளக்கம்: தன்னை ஆனந்தம்,அத்துவைதம்,பிரமம் முதலான விசேட வடிவத்தால் உணராமல் இருப்பது அஞ்ஞானம். இந்த அஞ்ஞானமே ஆரோபத்திற்குக் (உடல் முதலான தோற்றங்களுக்கு) காரணமாம். இவ்வுடல் முதலியவைகளை நான் என்று கூறுதல் அத்தியாசம் எனப்படும். ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல் அத்தியாசம். சாட்சி சேதனமாயிருக்கின்றதான் என்பதே உண்மையாகும். இந்த 28 தத்துவங்களும் பஞ்சீகிருத,அபஞ்சீகிருத பூதத்தோற்றங்கள் என்றும், சீவன் அவித்தையாகிய இரண்டும் இராஜத குண காரியம் என்றும் உணர்ந்திடில் இந்த தூல சூட்சும காரணதேகங்கள் அத்தியாசத்தினால்தான் தாமாக தோன்றுகிறதே தவிர உண்மையிலேயே

தனக்கு அன்னியமானது என்பதாம். அதாவது இந்த 28- தத்துவங்களும் தோற்றியும் பொய்யாம். கயிற்றில் பாம்பு போலவும், சொப்பனம் போலவும், கானல் நீர் போலவும், கட்டையில் கள்வன் போலவும் தோற்றிய போதிலும் விசாரித்திடில் பெய்யாய் போவது போல என்பது.

(ஆத்மாவிற்கு சத்துத்தன்மை, சேதனத்தன்மை, ஆனந்த ரூபத் தன்மை, அத்துவிதீயத் தன்மை என நான்கு விசேடங்களும், தேகாதிகளுக்கு அசத்துத்தன்மை, சடத்தன்மை, துக்கவடிவத்தன்மை, துவைதத்தன்மை என நான்கு விசேடங்கள் இருக்கும். இதனில் ஆத்மாவின் சத்துத்தன்மையும் சேதனத்தன்மையும், தேகாதிகளின் அசத்துத்தன்மை சடத்தன்மைகளை மறைக்கும். அதனால்தான் தேகாதிகள் சத்தாகவும் சேதனமாகவும் தோன்றுகின்றன.

தேகாதிகளின் துக்க வடிவத்தன்மையும் துவைதத் தோடு கூடியத் தன்மையும் ஆன்மாவின் ஆனந்தவடிவத்தன்மையினையும், அத்வைத வடிவத்தன்மையினையும் மறைத்து இருக்கின்றன. அதனால் ஆன்மா துக்கமுடையதும் துவைதத்தோடு கூடியதாகவும் தோன்றுகிறது. இவ்விரு விசேடங்களின் மறைப்பால் பூரணத் தன்மை, நித்தியமுத்தத்தன்மை முதலிய விசேடங்களும் மறைக்கப்படுகின்றன.இப்படி ஆத்மாவிற்கும், பஞ்சகோசங்களுக்கும் ஒன்றுக்கொன்று பிரமை (அத்தியாசம்) இருப்பதால் அவசியம் விசாரிக்க வேண்டுமாம்).

இப்போது 35-தத்துவங்களும் அன்னியம் என்று நிரூபிக்கப்படுகின்றது. முன்னர் கூறப்பட்ட 7-தத்துவங்களும் (பஞ்சபூதங்கள்-5+மாயை-1+மாயாபிரதிபிம்பரான ஈசுவரன்-1=7) தானல்ல என்றும் தனக்கு அன்னியமானது என்றும்,பின்னர் அத்தியாசத்தால் தானாகவும் உண்மையில் தனக்கு அன்னியமாகவும் கூறப்பட்ட 28-தத்துவங்களும் (தூலம்-6+சூக்குமம்-20+அவித்தை-1+சீவன்-1=28) ஆக மொத்தத்தில் (28+7) 35-தத்துவங்களும் தானல்ல என்றும், தனக்கு அன்னியமானவை என்றும் விசாரித்துத் தெளியப்பட்டது. முடிவாக 36-வது தத்துவமாகிய பிரமமே தான் என்றும் ருசிப்பிக்கப்பட்டது. இப்படி விசாரித்து பிரம சொரூபமாகவே தன்னை உணர்ந்தவனே சிவதரிசனம் பெற்றவனாகும்.

****

(34) இப்படிப் பிரமமே தாம் என்றும் மற்றை 35– தத்துவங்களும் தமக்கு அன்னியம் என்றும் பிரித்து, அறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியினாலே புத்திரதாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கின்றோம் என்கின்ற மூடகரம் (மூடச்செய்கை) போல இந்த இருபத்தியெட்டினுடைய தொழில்களையும் தம் தொழில்கள் என்று மயங்குகின்றமையால் இந்த இருபத்தியெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட(சம்பாதிக்கப்பட்ட) புண்ணிய பாவம் முதலிய கன்மங்களில் கட்டுப்பட்டு அந்தக் கன்மங்களின்படியே சனன மரண முதலிய சம்சாரங்களில் அடிபடுகிறோம் என்று மயங்குவர்.

விளக்கம் : அவிவேகிகளின் அகங்காரக் கிரந்தி என்பது: இழிவு பொருந்திய இருதயத்தின் முடிச்சுகள் அனைத்தும் அவிழ்ந்தன எனும் இவ்வாக்கியத்தால், தவத்தைக் கெடுக்கிற காமமானது கிரந்தி (முடிச்சு) வடிவம் என்று சொல்லப்பட்டது. விவேகம் அழிந்தமையால், அந்தக்கரணத்தையும் சிதான்மாவையும் ஐக்கியமாய் கற்பிதம் செய்து அதாவது ஒன்றாக்கி, இவ்வுலகில் எனக்கு இப்பொருள் கிடைக்குக, இப்பொருள் கிடைக்குக எனும் இச்சையே காமம் என்பதாம். சிதான்மாவை தாதான்மிய கற்பிதத்தால் அகங்காரத்தில் நுழைக்காமல், நிலைபெற்ற அகங்காரத்தை ஆன்மாவினும் வேறாகப் பார்த்திடில் குற்றங்கள் நிறைந்த கோடிக் கணக்கான பொருள்களை இச்சிக்கினும் துன்பம் பொருந்தாவாம் முடிச்சுக்கள் நாசமாவதால் என்று பஞ்சதசி கூறுகின்றது. புண்ணியம் என்பது நல்வினை, பாவம் என்பது தீவினையாகும். மிசிரம் என்பது பாவ புண்ணியங்களின் கலவையாகும். புண்ணியங்கள் தேவர்களாக்கும் எனவும், பாவங்கள் தாவரங்கள், மிருகங்களாக்கும் எனவும், மிசிரம் மனிதர்களாக்கும் எனவும் கூறப்படும்.

****

(35) பிரம சைதன்னியமே தானென்றும் மற்றைய 35– தத்துவங்களும் தானல்லவென்றும் தெளிந்த விவேகியானவன் அகங்காரக் கிரந்தியற்றபடியினாலே இந்த இருபத்தெட்டின் தொழில்களையும் நான் செய்யவில்லை என்றும், இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லை என்றும் திடப்படத் தேறி மயக்கமற்று இருக்கின்றபடியால் இந்த இருபத்து எட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட(சம்பாதிக்கப்பட்ட) புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கன்ம சம்பந்தம் இல்லாமையால் சனன மரண முதலிய சம்சாரம் இல்லாமல் முத்தனாகிப் பிரமம் மாத்திரமாகவே இருப்பான்.

விளக்கம்: பிராரத்த கருமங்களின் பேதத்தால், பிரமத்தை உணர்ந்தவர்கள் வெவ்வேறு பிரகாரமாய் இருப்பார்கள். அதனால் பொருந்திய சாஸ்திர அர்த்தங்களில் பண்டிதர்கள் மயங்கவேண்டியதில்லை. பிரமத்தை

சாட்சாத்கரித்தவர்கள், அடைகின்ற தத்தம் கருமங்களை கடைப்பிடிக்கின்றதால், எவ்விதமிருந்த போதிலும் எல்லோருக்கும் நான் பிரமமாய் இருக்கிறேன் என்கிற ஞானமானது ஒன்றேதானாம். அதேபோலவே முத்தி நிலையும் சமமேயாம்.

****

(35) இவனைச் சீவன்முத்தன் என்றும், திடப்பிரஞ்ஞன் என்றும், பகவற்பக்தன் என்றும், குணாதீதன் என்றும், பிராமணன் என்றும் அதிவருணாச்சிரமி என்றும் வாசிட்ட முதலிய சாத்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம் பண்ணி மோட்சம் அடையக்கடவர்.

விளக்கம் : கர்த்திருத்துவம், போக்திருத்துவம்,சுகம், துக்கம் முதலிய லட்சணமுள்ள சித்ததர்மம் கிலேச வடிவதாயிருப்பதால் பந்தமாகின்றது. இதை தத்துவ ஞானத்தினாலே நீக்குதலே சீவன் முக்தி என்று சொல்லப்படும். உலகப்பார்வையால் விவகாரங்களை உடையவனாயினும் முன்பிருந்த திருசியங்கள் மறைபட்டு ஆகாயம் மாத்திரம் நிலைத்திருப்பதால் அவன் சீவன் முத்தன் எனப்படுகின்றான். விருத்திகள் இல்லாத சுழுத்தி போல சகலமும் மறைபடுகிறதால், ஞான ஆகாயம் மட்டும் மிஞ்சுகின்றது. நனவினில் சுழுத்தியுள்ளவனும், வாசனையற்ற போதம் உள்ளவனும், விசிராந்தி அடைந்த சித்தமுடையவனாய் உள்ளவனும், செய்யினும் செய்யாதவனாயும்,உலகத்தினால் கலக்கத்தையடையாதவனும், உலகிற்கு கலக்கம் தராதவனும், சம்சாரங்கள் இல்லாதவனும், கலைகள் உடையவனாயினும் கலைகள் இல்லாதவனும், சித்தமுடையவனாயினும் சித்தம் இல்லாதவனாயும், சகல காரியங்களையும் செய்பவனாயினும் சீதளமாயும்,பூரணாத்மாயும் இருக்கிறவன் சீவன் முத்தன் எனப்படுவான்.

திடப்பிரஞ்ஞன் என்பது நிலைத்த தத்துவ ஞானத்தையுடையவனாகும். சமாதியையுடையவன் எல்லாக் காமங்களையும் விட்டு ஆத்மாவினிடத்திலே ஆத்மாவால் ஆனந்தம் அடைந்தவன் துக்கங்களில் இல்லாமலும் சுகங்களில் ஆசை நீங்கினவனும் இச்சை, பயம் குரோதம் முதலியவைகள் ஒழித்தவனும் திட புத்தியுடையவனும்,இந்திரியங்களை அடக்கியவனும், அவற்றை வசப்படுத்தியவனும் திடப்பிரஞ்ஞன் என்று சொல்லப்படுகின்றான்.

சகல பூதங்களையும் வெறுக்காதவனும், மைத்திரியுடையவனும், கருணையுடையவனும்,எனது என்பதில்லாதவனும், அகங்காரமில்லாதவனும், சுகதுக்கங்களில் சமத்துவமுள்ளவனும், பொறுமையானவனும், எப்போதும் சந்தோஷமுடையவனும், யோகியும், முயற்சியுடையவனும், திடநிச்சயமுள்ளவனும், ஈசுவரனிடத்தில் மனோபுத்திகளை ஒப்படைத்தவனும், சுப அசுபங்களை விட்டவனும்,பற்று இல்லாதவனும், மவுனியும், கிடைத்ததில் திருப்தியுடையவனும் வசித்தற்கு ஓர் வீடில்லாதவனுமான பக்திமானாகிய புருடன் எனக்குப்பிரியன் என்று பகவத் கீதையின் 12-வது அத்தியாயத்தில் பகவத் பக்தன் பற்றி பகவானால் வர்ணிக்கப்படிருக்கிறது.

சத்துவ, ரஜோ, தமோ குணங்களின் பரிணாமமே சம்சாரம் எனப்படும். சம்சாரத் தன்மை இல்லாததே குணாதீதம் என்கின்ற சீவன் முக்தத் தன்மையாம். குறிகளும், நடத்தைகளும் குணாதீதத் தன்மையை வெளிப்படுத்துபவைகளாம். விழயங்களில் அநுகூலம் என விரும்புவதும், பிரதிகூலம் என வெறுப்பதும் இல்லாமலும், உதாசீனனாய் (சும்மா இருத்தலாய்) இருப்பவனாய் முக்குணங்களாலும் அசையாதிருப்பவனும், சலிக்காமலும் (நானேசெய்கின்றேன் என்கின்ற அத்தியாசமும்), தன்னிச்சைப்படி சமாதியில் இருப்பவனும், கல்லையும், பொன்னையும் சமமாய் பார்க்கின்றவனும், நிந்தையிலும் துதியிலும் சமானமானவனும், பகை, நட்பு என்கின்ற இரண்டிலும் சமானமானவனும், எல்லாச் செய்கைகளையும் விட்டவனும் குணாதீதன் எனப்படுகின்றான் என்று பகவத் கீதையின் 14-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராமணன் என்பது பிரமவித்து என பிரஹதாரண்யம் கூறுகிறது. வியாசர் முதலானோர் கூறுவது: இடை வஸ்திரமும், மேல் வஸ்திரமும் இல்லாதவனும், பாய் முதலியவற்றில் படுக்காதவனும்,கையைத் தலையணையாக வைத்துக்கொள்பவனும், சாந்தனுமாகிய அவனைத் தேவர்கள் பிராமணன் என்று அறிவார்கள். கிடைத்ததைப் புசிப்பவனும், கந்தை கௌபீன வஸ்திரமுடையவனாய், தண்டம் தாங்கியவனாய், தியான தற்பரனாய், தனித்தவனாய் இருக்கின்றவனையே பிராமணன் என்பார்கள். ஆசிர்வாதம் செய்யாதவனும், ஒரு கிரியையும் செய்யாதவனும், நமஸ்காரம் செய்யாதவனும், துதி செய்யாதவனும், பாம்பினைக் கண்டு பயப்படுவதைபோல கூட்டத்தைக் கண்டு பயப்படுபவனும், பிணத்தைப் பார்ப்பது போன்று ஸ்திரீயைக் கண்டு

பயப்படுபவனும், எப்போதும் ஆகாயம் நிறைந்தது போன்று இருப்பவனும், ஜனக்கூட்டத்தை சூனியமாக பார்க்கின்றவனுமான சீவன்முத்தனை பிராமணன் என்று அறிவர் என்று சுருதிகள் கூறுகின்றன.

அதிவர்ணாசிரமி சூதசங்கிதையின் முக்திகண்டம் 5-வது அத்தியாயத்தில் விஷ்ணுவை நோக்கி பரமேஸ்வரனால் கூறப்பட்டது:- பிரம்மச்சாரி, இல்லறத்தான், வானப்பிரஸ்தன், சந்நியாசி, அதிவர்ணாசிரமி என்னும் இவர்களும் அதிகாரிகளாவர்.அதிவர்ணாசிரமி எல்லா அதிகாரிகளுக்கும் குரு எனப்படுவான். யாருக்கும் சீடன் ஆகான். தேகத்திலிருந்து வேறான சாட்சி, சத்து, சித்து ஆனந்த, அனந்த பரத்தை அபரோட்சமாய் அறிந்தவன். மகாவாக்கியத்தால் ஆத்மாவாகிய ஈசுவரனை அறிபவன். வருணாசிரமங்களிலிருந்து நீங்கியவன். என்னிடத்தில் சகல சகத்தும் சேட்டிக்கிறது என்று அறிபவன். மாயையினாலே சொப்பன பிரபஞ்சங்கள் தோன்றுவது போல் சாக்கிர பிரபஞ்சம் தோன்றுகிறது என்று அறிந்தவன். தேகமன்று; இந்திரியமன்று; பிராணன் அன்று; மனம் புத்தி அகங்காரம் அன்று;சித்தம் அன்று;மாயையும் அன்று; ஆகாசாதி பிரபஞ்சமும்அன்று;கர்த்தாவும் அன்று;,போக்தாவும் (புசிப்பவனும்) அன்று; புசிப்பிப்பவனும் அன்று; மற்றோ சச்சிதானந்த ரூப பிரமமே ஆத்மா;ஆத்ம விஞ்ஞானிக்கு விதியில்லை, விலக்குமில்லை; கொள்ளத் தக்கதும் தள்ளத் தக்கதும் என்ற கற்பனை இல்லை; ஞானியின் ஈசுவர சம்பந்தமான நிஷ்டையினை அஞ்ஞானிகள் அறியார்கள்; கேசவ ! பிரம ஞானிகளது இந்த நிட்டை புறக்கண்களால் காணக்கூடியதன்று;அது இயல்பாகவே பெறப்பட்டதாம்; எந்த பிரமத்தில் ஜனங்கள் நித்தியம் தூங்குகின்றார்களோ அங்கு யோகி விழித்திருக்கின்றான்; எந்தப் பிரபஞ்சத்தில் அவர்கள் தூங்குகின்றார்களோ அங்கு அவன் விழித்திருக்கின்றான்; இவ்வாறு தன்னை துவந்துவம் இன்றியதும், நிர்விகற்பமும், நிரஞ்சனமும் நித்தியமும், சுத்தமும், நிராபாசமும், பராமிருதமுமாய் எவன் வேதாந்தங்களாலும் சுவாநுபூதியானாலும் நிச்சயிக்கப்பட்டதாக அறிகின்றானோ அவன் அதிவர்ணாசிரமி எனப்படுவான். அவனே உத்தமமான குரு.

இவ்வாறு முத்தன் பந்தத்தினின்றும் விடுபடுகின்றான் என்றல் முதலிய சுருதிகளும், சீவன் முக்த, திட பிரஞ்ஞ. பகவத். பக்த, குணாதீத, பிராமணாதி வர்ணாசிரமிகளைக் கூறுகின்ற ஸ்மிருதிகளும், சீவன் முக்தி உண்டென்பதில் பிரமாணங்களாம் என்று நிலைத்தது.

முற்றியது.

முடிவுரை

வேதாந்தம் என்ன சொல்கின்றது என்பதனை அறிய ஆவல் உடையோர்க்காக ஆரம்ப கால நூலாகப் பயன்படுவது இந்தநாநாசீவ வாதக்கட்டளை என்கின்ற இந்த வேதாந்த சாத்திரமாகும். இதில் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் மிக அழகாக மந்த மதியுடையோர் பொருட்டு ஆக்கித் தந்துள்ளார்; இதற்கு பலமகான்களால் விளக்க உரைகள் அந்தந்த காலத்திற்கு தக்கப்படி வெளியிடப்பட்டிருக்கின்றன, என்பது யாவராலும் அறியப்பட்ட ஒன்றாகும். அப்படியே தற்காலத்திற்கு ஏற்ப இதற்கு எம்மால் விளக்க உரை எழுதப்பட்டுள்ளது. இதற்கு உதவியாயிருந்த நூல்கள் ஆத்மபுராணம், பஞ்சதசி, கைவல்ய நவநீதம், வேதாந்த சூளாமணி, விசாரசாகரம் முதலிய வேதாந்த சாத்திரங்களாகும்.

இந்நூலை விசாரித்து தெளிந்த அன்பர்கள் மேற்குறிப்பிட்ட நூல்களை அவசியம் படித்து உணர வேண்டும் என பணிவோடு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நூலை அவசியம் தற்கால சந்ததியினர்க்குப்போய்ச் சேரவேண்டும் என்னும் விபு வித்யா பீடத்தினைச் சேர்ந்த அனைத்து மெய்யன்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் பாடிய நல்லூரின் கண் அமைந்துள்ள விபு வித்யாபீடத்தில் வாரந்தோறும் வேதாந்த பாடங்களை நடத்திவருகின்றார்கள் என்பதும் நம் எல்லோருக்கும் சந்தோஷம் கொடுக்கக் கூடிய விழயமாகும். வேதாந்த ஆராய்ச்சியில் விருப்பமுடைய அனைவருக்கும் இது ஒரு வரப்பிரசாதமே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இங்ஙனம்

ஜவஹர் சுவாமிகள்

ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத் பாதாசாரிய சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

விவேக சட்கம்

1. அனித்திய பூதத் தேகம் நான்அன்று
இந்தி(ரி)யத் தரங்க(ம்) நான் அன்று
நனித்த ஆங்காரப் பிராண வர்க்கங்கள்
அன்று நற் புத்தியும் அன்று
தொனித்திடும் தாரமனை செல்வங்களுக்குத்
தூரமாம் சாட்சி நான் என்றும்
தனித்து நித்தியமாய்ப் பிரத்தியக் ஆன்மாவாம்
தற்பதப் பொருளதாம் சிவோகம்

2. உற்பவன் விருத்தன் அன்று நான்ஓர்
காலத்தினும் நசிப்பவன் அன்று
அற்பமாம் தேக காரியமான
அவையெலாம் அகங்காரத்து அல்லால்
தற்பத வடிவாம் சின்மயமான
எனக்கு இ(ல்)லை சகள நிட்களமாய்
எப்புறத் தேனும் எல்லையற்று இருக்கும்
இன்ப சிற் சொரூபமாம் சிவோகம்.

3. சத்திய ஞானனந்தமாம் பிரமத்து
உதித்திடும் மாயையில் சனித்த
மெத்தும் இவ்வுலகம் சேதனதத்து இடையே
நசிக்கும் அது எதுஎன விளம்பில்
தத்து சொப்பனமும் சுழுத்தியில் அசத்தாம்
தன்மைபோல் சத்து இலாது இருக்கும்
சுத்த பூரணமாய் நித்திய மாகித்
துலங்கிய சொரூபமாம் சிவோகம்.

4. பழுதை தன்னிடத்தில் பாம்புதோன்றுதல் போல்
பரப்பிரமத்திடை அதனில்
கழி தரும் அஞ்ஞானத்தினால் சீவன்
உதித்திடக் கண்டவன் ஒருவன்
பழுதை என்றதனால் சர்ப்ப மோகமும் போய்ப்
பழுதையாய்க் கண்டது போல
வழுவில் தேசிகனார் சீவன் நீ அன்று
என்று அறைந்திட ஆகினேன் சிவோகம்

5. எமக்கும் அன்னியமாம் உலகம் ஒன்றில்லை
எவ்வுலகங்கள் எம்மிடத்தில்
சமித்து உற்பவமாம் ஆதலால் மாயை வடிவம்
அது எதுஎனில் சாற்ற
அமைத்த கண்ணாடி விம்பமாம் நிழல் போல
அடங்கி எம்மிடத்தினில் விளங்கும்
தமத்துவம் இல்லாச் சச்சிதானந்த
தற்பத விமலமாம் சிவோகம்.

6. சாக்கிரம் அதனில் இந்திரியங்கள்
தமக்கு மேல் சாட்சியாம் சிவோகம்
தேக்கு சொப்பனத்தில் உலகரூப மதாய்ச்
செய்மனச் சாட்சியாம் சிவோகம்.
தாக்கிய சித்த நாசமாம் சுழுத்தி
அவத்தையில் சாட்சியாம் சிவோகம்
நீக்கம் இல் துரியாநந்தமாம் சர்வ
நிர்மல சாட்சியாம் சிவோகம்.

இந்நூலின் ஆசிரியரைப் பற்றி...

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கீழையூர் என்று அழைக்கப்படும் கீழரங்கம் என்ற ஊரில் உயர்திரு. சுப்பிரமணியம் பிள்ளை - செண்பகவல்லி தம்பதிகளுக்கு மூன்றாம் மகனாக பிறந்தார். தாய், தந்தை இட்ட பெயர் ஜவஹர்.

டிப்ளமோ இன்ஜினியரிங் பிரிவில் பட்டம் பெற்று சென்னை பாடியில் தொழிற்சாலை அமைத்து சில காலம் தொழிற்சாலை உரிமையாளர் சங்க தலைவராக பதவி வகித்தார்கள். துணைவியார் பெயர் வசந்தா அம்மையார் மூன்று பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் மகனும் உள்ளனர். அம்பத்தூரையடுத்த புதூரில் வசித்து வருகிறார்.

பூர்வ புண்ணியத்தால் தனது குருவான ஸ்ரீ ஏழுமலையானந்தா சுவாமிகளை சந்தித்து ஆன்மீக நெறியில் நாட்டம் கொண்டு சிறந்த இல்லற ஞானியாக வாழ்ந்து வருவதோடு கைவல்யம், பஞ்சதசி, கட்டளை போன்ற வேதாந்த நூற்களை ஆய்வு செய்து இறையுணர்வு பெற்றதோடு அல்லாமல் தமது குருமார்களான பலருக்கு அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களை பூசித்தும், அவர்கள் எதார்த்த நிலை அடைந்த பிறகு அவர்களுக்கு சமாதி ஆலயம் வைத்தும், குருபூஜைகள் செய்தும், அதோடு மட்டும் அல்லாமல் வறுமையுற்ற ஏழை, எளியவர்களுக்கு சிவசேவையாக தன்னிடம் உள்ள செல்வத்தை அர்ப்பணித்தும், தான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்ற நிலையில்தனது குருமார்களிடமும் நூற்கள் வாயிலாகவும் தான் பெற்ற ஞானத்தை உலகத்தோர்க்கு வழங்கும் பொருட்டு, விபு வித்யா பீடத்தில் வாரந்தோறும் வேதாந்த பாடங்களை நடத்தியும், பல நூற்களுக்கு விளக்க உரைகள் எழுதியும், அவர்களின் பணி தொடர்ந்தவண்ணம் உள்ளது. அவர்களை பாராட்டி கண்டிகை கிராம மனித நேய இளைஞர் நற்பணி மன்றத்தாரால் இவருக்கு "சிவனருட் செல்வர்" என்ற சிறப்பு பட்டத்தை அளித்து கௌரவித்தார்கள்.

சுவாமிகள் உரை செய்துள்ள நூல்கள் :

சசிவன்னபோதம்	-	2008
சிவபுராணம் பகுதி 1	-	2008
சிவபுராணம் பகுதி 2	-	2009
கைவல்யம் (மூலமும், உரைநடையும்)	-	2009

இங்ஙனம்,

விபு வித்யா பீடம்,

பாடியநல்லூர், சென்னை-52.